https://tamileelamarchive.com/

# நெருப்புப் பறவைகள்



https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/



## நாதன், கஜன்:

# சிறகை விரித்த பறவைகள்

பூகம்ப காலத்து அக்னிப் பறவைகளாக சிறகை அகல விரித்தனர் இருவர். அவர்களை அழித்துவிட்டதாக எதிரி எண்ணுகிறான். அக்னியை எரிக்க யாரால் முடியும்? களைகளை, எதிரிகளை எரித்து விடுதலையின் ஒளியை தாயகத்தில் பாய்ச்சவல்லோ அவர்கள் நெருப் பாய் மாறினர். அந்நெருப்பின் அணைப்பில் தமிழர் நெஞ்சமெல்லாம் தீப்பற்றி எரிகின்றது. அச் சுவாலையில் தீமைகள் அழிந்து சத்தியம் தளைக்கும்.

போராட்ட காலம் ஒரு பூகம்ப காலம்; எரிமலை வெடிப்பாக போரின் குமுறலும், அழிவும், சாவும், குருதிப்புனலும் நிகழும் காலம். அவ்வக்னி ஆற்றைக் கடக்க முற்படும் போராளிகள் நெருப்பாய் மாறுகிறார்கள். நெருப்புப் பறவைகளாய் உயரப் பறக்கவும், அகலச் சிறகை விரிக்கவும் செய்கிறார்கள். கனவுகள், சிந்தனைகளை உயரப் பறக்க விடுகிறார்கள். அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் தீவிர ஆர்வமும், சளைக்காத வேகமும் காட்டுகிறார்கள். எந்தக் காரியமும் அவர்களுக்கு எளிதாகச் செய்து முடிக்கக்கூடியதாகின்றன.

குளிர், சூடு, பனி, மழை என்பன அவர்களைப் பாதிப்பதில்லை. சோம்பல் எங்கோ பறந்துவிடுகிறது. இரவு பகலாகிறது. நித்திரையை அவர்கள் கணக்கில் எடுப்பதில்லை. தமது மக்களுக்காக மரணத்தையும் தழுவிக்கொள்ள அவர்கள் தீர்மானித்த பின்னர் மரணத்தைக் கண்டு அவர்கள் அஞ்சுவதில்லை.

இம்மாவீரர்களுக்கு இவ்வளவு ஆற்றல், துணிவு எங்கிருந்து கிடைக் கிறது. தாம் நேசிக்கும் மக்களிடமிருந்தே அச்சக்தியைப் பெறுகிறார்கள். இவர்களது ஆன்ம விரிவு தேசத்தை, தேச நலனை அணைப்பதாக இருக்கிறது. மக்களின் நலனுக்கான செயற்பாட்டில், போராட்டத்தில் அவர்களது ஆற்றல் பலமடங்காய்ப் பெருகுகிறது. தூய்மையே அவ்வாற்றலின் சாரமாய் அமைகிறது. மக்களும் தங்கள் அபிலாசைகளின் குறியீடாக, தங்கள் சக்தியின் திரட்சியாக, தங்கள் கருத்துக்களின் ஒட்டுமொத்த வடிவமாக, விடுதலைக்கு வழிகாட்டும் ஒளியாக அவர்களைக் காண்கிறார்கள். மக்களுக்கும் மாவீரர்களுக்கும் இடையிலான இணைப்பே சக்தியாகப் பிரளயம் கொள்கிறது. அதுவே போராட்டம் எனும் பூகம்ப வெடிப்பாக மாறுகிறது.

பூகம்ப காலத்தில், தான், தன்வீடு என்று பார்த்துச் செயற்படுதல் மடமை. தேசமக்கள் அனைவரதும் நலனுக்காக போராட்டத்தில்

https://tamileelamarchive.com/



நான் என்பது அகன்று நாம் என்று எப்போது செயல்படத் தொடங்குகிறோமோ அவ்வான்ம விரிவுக்கு ஏற்றவாறே எம் பலமும் அதிகரிக்கிறது. எமது மனச் சஞ்சலங்களும், துன்பங்களும் குறைகின்றன. எனவேதான் மாவீரர்கள் சிரித்தபடியே போரிடுகிறார்கள். மகிழ்ச்சியுடனேயே அக்னிப் பிரவேசம் செய்கிறார்கள். மாவீரர்களும் மனிதர்கள்தான். அவர்கள் அசாதாரண மனிதர்களாகப் பரிணாமம் பெற்றமைக்கு தேச நலனைத் தம் நலனாக எடுத்துக்கொண்ட மனநிலையே காரணம். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வதும், விடுதலைக்காப் போரிடுதலைத் தமது வரலாற்றுக் கடமையாக வரித்துக் கொள்வதும் அவசியமாகும்.

லெப்டினன்ட் கேணல் நாதனும், கப்டன் கஜனும் மக்களின் மனங்களில் ஒரு பூகம்பத்தைக் கிளப்பி விட்டுள்ளனர். செயல்வீரனான நாதனின் கனவுகள், ஆசைகள் ஒருவகை. ஏராளம் நிதி திரட்டப்பட்ட வேண்டும்; போராளிகளுக்கு, மக்களுக்குத் தேவையான, விடுதலைப் போராட்டத்துக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் தாயகத்தைச் சென்றடைய வேண்டும் என்பது. போராளிக் கவிஞனான கஜனோ, எழுத்து, கவிதை, நாடகம் போன்ற இன்னோரன்ன கலை, இலக்கியங்கள் மூலம் மக்கள் தேச விடுதலையின்பால் அணிதிரட்டப்பட வேண்டும்; மூட நம்பிக்கைகள், போலித்தனங்கள், ஏற்றத்தாழ்வுகள் அகன்ற புதிய தமிழர் தாயகம் உருவாக வேண்டும் என்று கனவு கண்டான். இக்கனவுகள் நிறைவேறும் வரை இப்பூகம்பத் தீ ஓயப்போவதில்லை.

★★★

https://tamileelamarchive.com/



# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

*04.11.1996*

பாரிஸ் நகரில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அனைத்துலகத் தலைமைச் செயலகத்தில் முக்கிய பணியாளர்களாகப் பணிபுரிந்த திரு.கந்தையா பேரின்பநாதன் (நாதன்) திரு. கஜேந்திரன் (கஜன்) ஆகிய எமது உறுப்பினர்கள் இருவர் பகைவனின் சூழ்ச்சியால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வை அறிந்து நான் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகின்றேன்.

திரு.நாதன் எமது விடுதலை இயக்கத்தின் ஒரு மூத்த உறுப்பினர் நேர்மையும் கண்ணியமும் மிக்கவர். விடுதலை இலட்சியத்தில் அசையாத உறுதி கொண்டவர். நீண்ட காலமாக சர்வதேச நிதி திரட்டும் பெரும் பொறுப்பைச் சுமந்து உலகெங்கும் அலைந்து அயராது உழைத்தவர். கடும் உழைப்பாலும். செயல்திறனாலும் தமிழீழ விடுதலைப் போருக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது.

திரு.கஜன் எமது இயக்கத்தின் பரந்துரை செயற்பட்டாளராகப் பணி புரிந்தவர். தாயக விடுதலையில் ஆழமான பற்றுடையவர். ஈழமுரசு ஆசிரியராகப் பணியாற்றி எமது இலட்சியப் போருக்கு ஆதரவு திரட்டுவதில் அரும் தொண்டு புரிந்தவர். நிதிசேகரிப்பு, பரந்துரை போன்ற முக்கிய சர்வதேசப் பணிகளில் ஈடுபட்டிருந்த இம் முக்கிய பொறுப்பாளர்கள் கொலையுண்டமை எமது இயக்கத்துக்கு மட்டுமன்றி எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் ஏற்பட்ட பாரிய இழப்பாகும். பரந்து வளர்ந்து உலகெங்கும் கிளை பரப்பி நிற்கும் எமது விடுதலை இயக்கத்தின் சர்வதேச கட்டமைப்பை சீர்குலைத்து அனைத்துலக ரீதியாக எமக்கு அணி திரளும் ஆதரவை முறியடிப்பதற்காக சிங்கள் இனவாத அரசு தீவிரமாகத் திட்டமிட்டு செயல்பட்டு வருவதானது உலகறிந்த உண்மை. வெளிநாடுகளில் எமது இயக்கத்தை தடைசெய்து, சர்வதேச தமிழ் சமூகத்திடம் இருந்து பெறப்படும் பங்களிப்பை முடக்கி ஈழத்தமிழரின் சுதந்திர இயக்கத்தை நசுக்கிவிட சந்திரிகா அரசு பகிரங்கமாகப் பகீரத முயற்சி செய்கின்றது. சிறிலங்கா அரசின் வெளிநாட்டு ராஜதந்திர நடவடிக்கைகள் இந்த நோக்

https://tamileelamarchive.com/



யம். இந்த இராஜதந்திர முயற்சிகள் பலனளிக்காது போகவே சிறிலங்கா அரசு நாசகார சூழ்ச்சியில் இறங்கியிருக்கின்றது. இந்தச் சூழ்ச்சியின் கோரமான வடிவமாக இந்தக் கொலைகள் நடைபெற்றதென நாம் நம்புகின்றோம்.

தமிழருக்கு எதிரான சிறீலங்கா ஆட்சியாளரின் அரச பயங்கரவாதம் இப்பொழுது கடல் கடந்து சென்று சர்வதேச அரங்கில் மேடை ஏறியிருக்கின்றது. அரூபகரங்களால் எமது அன்புக்குரியவர்கள் அநியாயமாக உயிர் நீத்துள்ளனர். இக்கோழைத்தனமான கொடூரமான செயலின் நோக்குதாரிகள் யார் என்பதை சர்வதேச உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் சர்வதேச சட்டங்களையும் மனித உரிமைகளையும் மீறும் பயங்கரவாதிகள் யார் என்ற உண்மை உலகிற்குப் புலனாகும். எதிரியின் கையாலாகாத்தனத்தின் அதிட்டமான வெளிப்பாடாகவே நாம் இந்தப் படுகொலைகளைக் கருதுகின்றோம். எமது போராட்டத்திற்கு ஆதரவு நல்கும் உலகத் தமிழ் சமூகத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு சவால் இது. எதிரியின் இச் சவாலை துணிவுடன் எதிர்கொண்டு தாயக விடுதலைக்கு தொடர்ந்தும் உறுதியுடன் பணியாற்றுமாறு உலகத் தமிழர்களை நான் வேண்டுகிறேன்.

மிகவும் சோதனையான இக்காலகட்டத்தில் நெஞ்சத்தை உலுக்கும் வேதனைகளையும் நாம் சுமந்து நின்று மிகவும் நிதானமாக மிகவும் விழிப்பாக உறுதி தளராது எமது இலட்சியப் பணியைத் தொடர வேண்டும். தாயக விடுதலையென்ற உயரிய இலட்சியத்துக்காக அயராது உழைத்து தமது இன்னுயிரை அர்ப்பணித்த இலட்சிய வீரர்களுக்கு எனது இதய அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறேன்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

வே, பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்

★★★

https://tamileelamarchive.com/



# என் தளபதி!

1984ம் ஆண்டில் முதன் முதலாக எனது நண்பர் ஒருவர் நாதனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்றில் இருந்து இந்த மண்ணை விட்டுச் செல்லும் வரை எனது தளபதி என்னுடன் வேலை செய்து வந்தார்.

என் தளபதியின் மரணம் கேட்டு எனது இதயம் சில நொடிகள் நின்று விட்டது. அவனது இழப்பு எனது மனதில் ஆழமான பாதிப்பை ஏற்ப டுத்தி விட்டது. எத்தனை தடவை சந்தித்து இருப்போம். எமக்கு இடை யில் எப்படியொரு ஆழமான உறவு இருந்தது.

எத்தனை பிரச்சினைகளை தாண்டி வந்து என்னிடம் வெற்றிகளை குவித்து இருந்தாய். ஒவ்வொரு நாளும் உன்னுடன் கதைக்காமல் நான் நித் திரை கொள்வது இல்லையே.

ஏன் இப்படி எங்களையெல்லாம் விட்டு விட்டு நீ போய் விட்டாய்?

உன் சாதனைகளை நான் எப்படி எழுதுவது? உன் முழுச் சாதனைக ளையும் என்னால் எழுத முடியாது. எழுதக் கூடியவற்றில் சிலவற்றை எழுத முயற்சிக்கின்றேன். நீ கால் பதிக்காத துறை தான் என்னடா! நீ கால் பதிக்காத நாடு தான் எதடா?

நிதி சேகரிப்பில் அண்ணாவை ஆனந்தத்தில் ஆழ்த்தும் வகையில் நிதியை சேகரித்து வந்து தருவாயே.

தளபதி கிட்டுவிற்கு பிரச்சினை என்று எல்லோரும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கும் போது கிட்டுவை பாதுகாப்பாக யார் கொண்டு வந்து சேர்ப்பார்கள் என்று யோசித்து விட்டு உன்னிடம் பொறுப்பை ஒப்ப டைத்தோம். கிட்டுவை பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தாயே. அது உன்னால் தான் முடியும்.

தலைவர் கேட்கும் அத்தனையையும் அவரின் காலடியில் கொண்டு வந்து குவித்தாயே இது யாருக்குத் தான் தெரியும்.

எமது அமைப்பு வேலைகள் எங்கு பலவீனமாக இருக்கின்றதோ அந்த இடத்தில் இறங்கி எப்படி வேலைகளை புத்துயிர் செய்ய வைத்தாய்.

எந்த வேலை சொன்னாலும் வேலையை முடித்து விட்டு வந்து கதைப் பதுதானே உனது வழக்கம்.

குளிர், பனி, வெய்யில், இரவு, பகல் எதுவும் உனது வேலையைப் பாதிப் பது இல்லையே.

https://tamileelamarchive.com/



அடிக்கடி ‘அண்ணா நீங்கள் பாதுகாப்பாக இருங்கள்; எது என்றாலும் சொல்லுங்கள் நான் செய்து முடிப்பேன்’ என்று கூறுவாயே. கடைசியில் அண்ணாவை தனிய விட்டு விட்டு போய் விட்டாயே.

அடிக்கடி போர்க்களத்துக்கு போகப் போகின்றேன் என்று நீ கேட்ட போதெல்லாம் நீ போர்க்களத்துக்கு வந்தால் – வெளியில் இருந்து எமது போராட்டத்திற்கு தேவையானவற்றை யார் செய்வது என்று கூறி உனது ஆசையை நிறைவேற்றாமல் விட்டு விட்டேனே. உன்னை போர்க்களத் துக்கு வரவிட்டு இருந்தால் உன்னை நான் இன்று இழந்திருக்க மாட்டேனே. உனது பிரிவு எனது இதயத்தை, ஏன் எமது இயக்கத்தின் போராளிகள் அத்தனை பேரதும் இதயத்தையும் துளைத்து இருக்காதா.

வெளிநாடுகளுக்கு சென்ற இளைஞர்கள் பலர் தாய் மண்ணை மறந்து இருக்கும் காலத்தில் நீ உனது தாய் மண்ணுக்காக எப்படி, எப்படி ஓடி, ஓடி உழைத்தாய்.

தலைவரின் காலத்தில் தமிழ் ஈழம் காணவேண்டும். தலைவரை தமிழீ ழத் தலைவராக பார்க்க வேண்டும் என அடிக்கடி ஆசையாக என்னிடம் கூறுவாயே. அதனைக் கூட மறந்து போய் விட்டாயே.

நீ விட்டுச் சென்ற உனது இலட்சியப் பயணம் தொடரும். எமது தாய் விடுதலை பெறுவாள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

— அண்ணா

★★★

https://tamileelamarchive.com/



# தொண்டனாய் தோழனாய் பிள்ளையாய் ஆசானாய்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து எமது இயக்கம் எதிர்கொண்ட பிரச்சினைகள், வெற்றிகள், தோல்விகள் இழப்புக்கள் பல. 1984 இப்படித்தான் ஓர் நாள் நாதன் எமது காரியாலயத்திற்கு வந்திருந்தான். விடுதலைக்கு தானும் வேலை செய்ய விரும்புவதாகக் கூறினான். குழந்தைமுகம், எதையும் அறியும் ஆர்வம்; எதையும் செய்யத் தயாரான மனம். இது தான் அவன் மேல் எனக்கு ஏதோ ஓர் பற்றை தோற்றுவித்தது.

போராட்டத்துக்கு தேவையான நிதிசேகரிப்பாக இருந்தாலும் சரி, பிரச்சாரத்திற்கு தேவையான என்ன வேலையாகவிருந்தாலும் சரி அதைச் செய்வதில் எப்போதும் ஆர்வமும் வேகமும் காட்டியே வந்தான். நாட்டிலிருந்து 'களத்தில்' பத்திரிகை வரும். 2500–இற்கு மேற்பட்ட பிரதிகள் அடிப்போம். பத்திரிகை வந்தால் அடுத்து அவனை பெல்வீல் சந்தையிலோ அல்லது பார்பஸ் சந்தையிலோ தான் காணமுடியும். அங்கே வரும் எம்மவர்க்கு அதை விற்பதில் இல்லை – தாயக செய்திகளை அவர்களுக்கு தெரிவிப்பதில் அவன் காட்டிய உற்சாகம் மனக்கண்ணில் இன்னும் நினைவிருக்கிறது. நாட்டிலிருந்து அன்றாடம் வரும் செய்திகளை எனக்குத் தெரிவிப்பதற்கு எப்போதும் என்னிடம் ஓடி வருவான். செய்தியை அறிவதில் அவனுக்கிருந்த ஆர்வம் பெரியது. இப்படித்தான் தொண்டன் நாதனாய் இருந்தான்.

1984–ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சுழிபுரம் படுகொலைகள் மூலம் 'புளட்' கும்பல் தனது வெறித்தனத்தை எமது போராளிகளின் மேல் காட்டியிருந்தவேளை, 'புளட்'டின் உண்மைப்படலத்தை வெளிக்கொணர வேண்டிய நிலையில் அவற்றை மக்கள் முன்வைக்கவேண்டிய கடமை வெளிநாட்டில் எம்முடையதாக இருந்தது. அவ்வேளையில் சக போராளிகளுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு துடித்த நாதனை அவனின் செயற்பாட்டு வேகத்தில்தான் கண்டேன். நிலைமையை விளக்க நாம் செய்த பிரச்சாரத்தில், அவன் காட்டிய வேகம் 'புளட்' கும்பலின் சுய உருவத்தை வெளிக்கொணர்ந்தது. அவன் காட்டிய கடும் உழைப்பு. இன்னும் மனக்கண்ணில் நிற்கிறது.

1987–ல் இந்திய இலங்கை ஒப்பந்தம். இந்தியா எமக்கு உதவி செய்ய வரவில்லை போராட்டத்தின் ஆணி வேரை அறுக்கவே வந்துள்ளது. இந்தியாவின் போலிச் சாத்வீகத் தோற்றத்தை முறியடிக்க தமிழினத்தின், தமிழீழ மக்களின் உண்மையான சாத்வீகம் திலீபன் என்னும் தியாகச் சுடர் சாத்வீகப்போர் தொடுத்தது. திலீபனின் உண்ணாவிரத போராட்டத்துக்கு பக்கபலமாக பிரான்ஸிலும் எமது கிளையின் தோழர்கள்

https://tamileelamarchive.com/



உண்ணாவிரதம் இருந்தனர். இது திலீபனின் உண்ணாவிரதத்தை உலகுக்கு காட்ட நாம் எடுத்துக் கொண்ட முயற்சியாயும் இருந்தது. அங்கேயும் சக உறுப்பினர்களுடன் நாதன் உண்ணாவிரதம் மேற் கொண்டான். நாட்டில் போராளிகள் படும் வேதனைகளை, துன்பங் களை தானும் உண்மையாக தன்னுள் பகிர்ந்து கொண்டான். தன்னைத் தானே வருத்தி உழைத்தான்.

நாட்டிலே எமது போராளிகள், மக்களைப் பாதுகாக்க எதிரிப்படை மீது நல்ல பதிலடி கொடுத்தால் அவனிடம் இருக்கும் உற்சாகம் சொல்லத் தேவையில்லை. இழப்புகள் ஏற்பட்டால் அவன்படும் வேதனை, மறுகணம் இயக்க வேலைகளில் அவன் காட்டும் வேகம் என்பன விடுதலையை வென்றிட அவன் கொண்டிருந்த உறுதியைக் காட்டிற்று.

இயக்கத்திற்கு நிதிபலம் காணாது, அவசரம் பணம் வேணும் இப்படித்தான் நிதிப் பொறுப்பாளர் கூறுவார். உடனடியாக இறங்கு வான். குறைந்த அளவில் நிதி சேரும் நாட்டிற்குள் நுழைவான். கடுமை யான உழைப்பு, நித்திரை, சோர்வு அனைத்தையும் மறந்து குறுகிய காலத்திற்குள் அவனுடைய திறமையை காட்டிவிடுவான். இதுதான் அவனை சர்வதேச நிதிப்பொறுப்பாளராக உயர்த்தி வைத்தது. இயக்கத் திற்கு, போராட்டத்திற்கு நிதி சேகரிக்க அவன் கைக்கொண்ட முயற்சிகள், அவன் போட்ட அஸ்திவாரங்கள் முளைவிட்டு விருட்சங்களாய் வளர்ந்துள்ளதும் உண்டு.

1991–ம் ஆண்டு கிட்டண்ணாவிற்கு பிரச்சனை. கிட்டண்ணாவை நாதனே பாதுகாத்தான். எங்கே? எப்படி? எதுவுமே எனக்கு கூறவில்லை. என் வீட்டில்தான் படுத்தான்; எழும்பினான். அவனுடைய இயக்க விசுவாசத்தை கட்டுப்பாட்டை உறுதியுடன் காட்டி என்னுள் என்றுமே உயர்ந்திருந்தான்.

அவனுடைய முதுகெலும்பில் இரண்டு சில்லுகள் விலகியிருந்தன. அது அவனுக்கு பெரும் வலியை நிதமும் கொடுத்துக்கொண்டிருந்தது. சிங்கப்பூரில் இருந்து அவன் வந்தபோது இடுப்புக்கு கட்டும் பெல்ற் கட்டி வந்தான். முதுகெலும்பு வைத்திய நிபுணரிடம் காட்டியபோது அவன் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். குறைந்தது மூன்று மாதம் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். அதனுடன் கொஞ்சக் காலத்திற்கு நீண்டநேர பயணம் செய்யக்கூடாது. வேலைப் பளுவினால் அந்தச் சத்திரசிகிச்சையைச் செய்ய மனம் வரவில்லை அவனுக்கு. தான் படுக்கவேண்டி வந்தால் கனக்க வேலைகள் தடைப் பட்டுவிடும். கடைசி இரண்டு வருடங்களாக அந்த உபாதையுடன்தான் வேலைகளை செய்து வந்தான்.

எங்கு சென்று வந்தாலும் இயக்கத்திற்கு முழுநேரமாக வேலை செய்பவர்களுக்கு தனக்கு செலவுக்கு கொடுக்கப்படும் பணத்தில் ஏதாவது வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பான். முழுநேரமாக வேலை

https://tamileelamarchive.com/



செய்தவர்களின் நலனில் அவன் காட்டிய அக்கறை அது. கடைசியாக லண்டனில் இருந்த வந்தபோது ஒரு தோழனுக்காக பொருளொன்றை வாங்கித்தான் வந்திருந்தான். இது, எப்போதும் எல்லாரிலும் அவன் செலுத்திய கவனம்.

அப்போது நான் மறியலில் இருந்த போது எனைப்பார்க்க என் மனைவி வருவாள். ஒவ்வொரு குடும்பஸ்த்தரும் தங்கள் பிள்ளைகளுடன் வருவார்கள். திருமணம் செய்தும் சில வருடங்களாக குழந்தை இல்லாதிருந்தேன். அதைப்பற்றி யோசிக்கவே நேரமில்லாது வேலை செய்திருப்பேன். அப்போது என் மனைவியைப் பார்க்க எனக்கு பெரும் கவலையாகவிருக்கும். உதவிக்கு எவரும் இல்லாத நிலையில் என் மனைவி. அப்போது நான் சிறையில் இருந்து ஓர் கடிதம் எழுதியிருக்கிறேன், எங்களுக்கு பிள்ளை இல்லை. நீதான் எனக்குப் பிள்ளை. பிள்ளையாக இருந்து உன்னுடைய அம்மாவிற்கு செய்து கொடுக்க வேண்டியவற்றை செய்துகொடு என்று. சிறுவயதில் தகப்பனை பறிகொடுத்த பரிதவிப்போ என்னவோ அவனும் என்னை தகப்பனாக ஏற்றுக் கொண்டான். அன்றிலிருந்து அவன் என் தலைப்பிள்ளை; என்றைக்கு நான் சிறையிலிருந்து திரும்பி வந்தேனோ அன்றிலிருந்து எங்களுடனேயே வாழ்ந்து வந்தான்.

போராட்ட வாழ்வில் தனிமனிதனாக, குடும்பஸ்த்தனாக பல துன் பங்களை கண்டிருக்கிறேன். தொண்டனாய், தோழனாய், பிள்ளையாய் அவற்றில் என்னுடன் பங்கு கொண்டவன் நாதன். 1993–ம் ஆண்டு அவனிடம் வழங்கப்பட்ட பொறுப்பு வித்தியாசமானது. ஆனால் அதைச் சிறப்பாகத்தான் செய்து முடித்தான். பிரான்சுக்கு வந்தால் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. இது தான் நான் அவனுக்கு இட்ட கட்டளை. இருப்பினும் பிரான்சில் தனது வேலைகள் தொடர்பாக அவன் வேண்டிய வேலை செய்துகொண்டே வந்தான். இரவில் வெளியே தங்கக் கூடாது; வீட்டிற்கு வெள்ளென வந்திட வேண்டும் என்பேன். தலைவர் என்னிடம் ஒரு பொறுப்பை தந்துள்ளார். அதை நான் சரியாக செய்து முடிக்க வேண்டும். சனம் நிறையக் கஸ்டப்படுகிது. நாங்கள் நாட்டிற்கு நிறைய செய்ய வேண்டும் என்றுதான் எப்போதும் சொல்லிக் கொள்வான். ‘பாரிய அளவில் நிதி சேகரிப்பதற்கு ஓர் திட்டம் இருக்கிறது. இதை அண்ணாவிடம் கதை. அவருக்குத் தேவையான இடத்தில் சட்டப்படி பணம் சேரும்’ என்றதற்கு, ‘ஓம் நான் கதைக்கிறேன்’ என்றான். அதுதான் அவனுடன் இறுதியாக சனிக்கிழமை பின்னேரம் ஒன்றாக சாப்பிடும் போது கதைத்தது. அதற்குப் பின் என் பிள்ளையை என்னிடமிருந்து யாரோ பறித்து விட்டார்கள். போராட்ட வாழ்வில் இழப்புகள் சகஜம். ஆனால் ஒவ்வொருவருடைய நினைவுகளும் தாக்கமானவை. எழுத்தில் இங்கு நான் கூறியவற்றை விட அவன் எண்ணத்தில் மிகவும் இறுக்கமாக இணைந்து விட்டான்.

https://tamileelamarchive.com/



அவன் காட்டிய ஆர்வம். பாடசாலையில் வர்த்தகத்தில் உயர்தரக் கல்வியை பெற்ற அவனிடமிருந்து நான் கற்றுக்கொண்டது பல.

## கஜன்: நினைவுத் துளிகள்

1989–ம் ஆண்டு நான் சிறையில் இருந்து வந்து, மீண்டும் காரியாலயத்திற்கு சென்ற போது பல புதிய முகங்கள். இளைய முகங்கள், இனிய முகங்கள் வளர்ச்சி கொண்டு விட்ட அமைப்பைக்கண்டு உளத்துள் புளகாங்கிதம் அடைந்தேன். விடுதலையை நசுக்கி விட முனைந்த சிங்கள அரசுக்கு , இல்லை! இல்லை! எமது விடுதலைப் போர் வெல்லும் எனக் கட்டியம் கூறும் இளைய தலைமுறையின் எழுச்சியைக் கண்டுதான் என் உள்ளத்து உறுதி இன்னும் வலுப்பெற்றது,

கஜனை நான் கண்ட போது அதிகம் பேசாத மௌனம் சாதிக்கும் ஒருவனாகத்தான் கண்டேன். 'இவனா நண்பன்' நாடகத்தில் அவன் வகித்த பாத்திரம் அவன் உள்ளத்து உணர்வுகளை என்னைப் புரிய வைத்தது. அவன் பணியை அவன் செவ்வனே செய்வான் என்ற நம்பிக்கையை என்னுள் உறைய வைத்தது.

கிட்டண்ணா ஐரோப்பாவிற்கு வரவுள்ளார். உளத்தில் சந்தோஷம். நான் அவரை எப்படியும் பிரான்சுக்கு கூப்பிட வேண்டும். இங்கு வந்தால் நாம் கனவேலைகள் செய்யலாம். ஆனால் 'அவர் இங்கு மருத்துவ உதவி பெற வரலாம். இங்கு இருப்பதைப் பற்றி நான் சிந்தித்துத் தான் சொல்ல வேண்டும்' என்று அதிகாரிகள் சொன்ன போது சற்று கவலையாகத்தான் இருந்தது. இருப்பினும் அவர் இங்கிலாந்து செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்தாயிற்று.

இங்கிலாந்து செல்லும் கிட்டண்ணாவிற்கு உதவிக்கு ஆட்கள் தேவை. இதைச் சென்று பார்த்து உதவுமாறு எனது நண்பர் வலியுறுத்திக் கூறினார். பரஸ்பரம் அமைப்பில் ஒருவரின் பாதுகாப்பில் மற்றவருக்கிருந்த அக்கறை. நண்பனின் கட்டளையை ஏற்று நான் சென்று நிலைமைக ளைப் பார்த்தேன். பின்னர் கிட்டண்ணாவிற்கு அருகில் எப்போதும் இருவர் பிரான்சிலிருந்து போய் நின்று வேண்டியவற்றை இயன்றவரை செய்து வந்தனர். அப்போது தான் கஜனையும் நான் கிட்டண்ணாவிடம் அனுப்பி வைத்தேன். கிட்டண்ணா லண்டனை விட்டு வெளியேறும் வரையும் அவருடன் நின்றான். கிட்டண்ணா லண்டனை விட்டு வெளியேறியதும் இங்கு வந்து விட்டான்.

மீண்டும் இயக்கத்திற்கு நிதி சேகரிப்பிற்கு இத்தாலிக்கு போ என்று கேட்டுக் கொண்டேன். பல நெருக்கடிகளின் மத்தியிலும் சென்றான். அந்தக் கடமையையும் செவ்வனே செய்து முடித்தான். கஜனின் குடும்பம் பெரிய வசதியான குடும்பம் என்றும் சொல்வதற்கில்லை. இந்நிலையில் குடும்ப வருமானத்திற்கு அவர்கள் வைத்திருந்த வானையும் இயக்கம் தேவைக்கு எடுத்துக் கொண்டு விட்டது. ஆனால் விடுதலைப் போராட்

https://tamileelamarchive.com/



டத்திற்கான தனது செயற்பாட்டில் இயக்கத்துடன் அவன் உறுதியுட னிருந்தான். குடும்ப வறுமையைப் போக்க ஒரு சில மாதங்கள் அனுமதி பெற்று வேலை செய்தான். மீண்டும் வேலையைத் தூக்கி எறிந்து விட்டு குடும்பப் பொறுப்பை தம்பியிடம் ஒப்படைத்து விட்டு தன்பணி தொடர்ந்தான். இயக்க வேலைகள் எதுவாக இருந்தாலும் அவனிடம் சோர்வை நான் கண்டதில்லை. செயல் வேகத்தையே நான் கண்டேன்.

போராட்டத்தில் எல்லோரையும் இணைக்க வேண்டும்; மண்ணில் ஒருத்தரையும் நாங்கள் விலக்கி வைக்கக்கூடாது. எங்கள் கலந்துரை யாடல்கள் தொடரும். விடுதலையை நேசித்தவர்களை நாங்கள் விலத்தி வைக்கக் கூடாது. சரி எனக்கு அதில் எதிர்க்கருத்து கிடையாது. எல்லோரையும் மெல்ல மெல்ல அணி சேர்ப்பமண்ணை. சரி நீ முயற்சி செய்! அவனுடைய முயற்சி தோற்றுப் போகவில்லை. விடுதலையை நோக்கி அவனுடைய எதிர்பார்ப்புக்கள் வெற்றியைத் தேடிக்கொடுத்தன. கலை, இலக்கியம் தமிழ்த்தேசியத்தின் அரண்கள். அவன் கலை இலக்கிய கர்த்தாக்களைத் தேடினான். இல்லை தேடி அலைந்தான். படிப்படியாக ஈழமுரசின் அணிக்குள் கொண்டு வந்தான். தரம்மிக்க நூல்களை, சஞ்சிகைகளை, வீடியோ ஆவணங்களை தேடிக்குவித்தான். தனக்காக அல்ல. தமிழீழத்தில் கலை இலக்கிய களஞ்சியத்திற்கு. 'அண்ணை இதுகளை தமிழில் மொழிபெயர்த்து தாங்கோ எங்கட சனத்துக்கு போட்டுக் காட்டுவம்' அவன் தந்த வீடியோ கசட்டுக்கள் எனக்குள்ள வேலைப்பளுவினால் இன்னும் செய்யப்படவில்லை. இது அவன் என்னிடம் விட்டுச் சென்ற கடமை. இதை நான் எப்படியும் செய்து முடிக்கத்தான் வேண்டும். அவன் நேசித்த கலை இலக்கிய வளர்ச்சிக்கு, அதற்கு மெருகூட்ட ஈழமுரசின் வளர்ச்சியில் அவன் காட்டிய அக்கறை. கண்கள் சிவந்திருக்கும். காரணம். நித்திரைக் குறைவு அசதியைப் போக்க ஓர் கோழித் தூக்கம். காரியாலயத்துள் ஓர் மூலையில் பேப்பர் காட்போட்டை தூக்கி போட்டு விட்டு தூங்குவான். என் கண்முன்னே இப்படித்தான் வாழ்ந்தான். பசி, தூக்கம், சோர்வு அனைத்தையுமே கடந்து தாயக விடுதலைக்காக... ஓ என் அன்புக்குரிய கஜனே! உன்னை எங்களிடம் இருந்து பறித்தவன் யார்? ஏன் பறித்தான்? இயக்கத்தின் சர்வதேச செயற்பாட்டிற்கு உனது சேவையை இயக்கம் எதிர் கொண்டிருந்த போது ஏற்பட்ட இந்த இழப்பை எப்படி நாம் கூறிக் கொள்ள முடியும். இருப்பினும் நாம் உறுதி தளரவில்லை. நீங்கள் விட்டுச் சென்றபணிகளை உங்கள் நினைவுகளுடன் எடுத்துச் செல்வோம்.

அன்பானவர்களே உங்களுடைய மரணத்தின் மூலம் உங்கள் இலட்சியத்தை வென்று கொண்டீர்கள். உங்கள் வெற்றியை எங்கள் செயல் மூலம் உலகிற்கு நாம் உறுதிப்படுத்துவோம்.

வே. மனோகரன்
பிரான்சுக்கான பிரதிநிதி

https://tamileelamarchive.com/



# இறுதி அஞ்சலி உரை

**12.11.96** அன்று Pantin மயானத்தில் நடைபெற்ற மாவீரர்கள் லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரது வித்துடல்கள் விதைப்பு நிகழ்வின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரான்சிற்கான பிரதிநிதி திரு. வேலும்மயிலும் மனோகரன் அவர்கள் ஆற்றிய இறுதி அஞ்சலி உரை



மரணம் இயற்கையானது. உயிர் உள்ள யாவும் ஓர் நாள் மரணித்துப் போகும். ஆனால் நாதனுடையதும் கஜனுடைய தும் மரணம் இயற்கையானதாக அமையவில்லை அது செயற்கையா னதாக அமைகின்றது. அவர்கள் மரணிக்கப்பட்டார்கள் கொலை செய்யப்பட்டார்கள்; அவர்கள் இலட்சிய வீரர்களாக, கடமை வீரர்க ளாக மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

அவர்கள் தங்கள் மத்தியில் ஓர் இலட்சியத்தைக் வரித்துக் கொண்டார்கள். அந்த இலட்சியம் தமிழீழ தேசத்தின் விடுதலை, தமிழீழ மக்களின் சுதந்திரம் அதற்காக செயற்படுவதையே தமது கடமையாகக் கொண்டார்கள். அதை எதிர்த்து அழிக்க நினைத்த சிங்கள அரசு தன்னுடைய செயலை மிக வேகமாகக் காட்டியுள்ளது. அதனுடைய விளைவு தான் இந்த மண்ணிலே எங்களுடைய விடுதலைக்காக உழைக்க வந்த, போராட முன் வந்த இரண்டு போராளிகளை நாம் பறிகொடுத்து விட்டோம். ஆனால் நாங்கள் இதனால் தளர்ந்து போய்விடவில்லை. இன்னும் உறுதி கொண்டுள்ளோம். அவர்கள் வரித்துக் கொண்ட இலட்சிய உறுதி, விடுதலைக்காவும், சுதந்திரத்திற்காவும் வேலை செய்யும் அனைவர் மத்தியிலும் பற்றிக் கொண்டது. இன்று இங்கே அவர்களை நாங்கள் புதைக்க வரவில்லை. அவர்களை இங்கு நாங்கள் விதைக்க

https://tamileelamarchive.com/



வந்துள்ளோம். அந்த விதை குழியில் இருந்து எழுகின்ற அவர்களின் இலட்சியங்களை இங்கே இருக்கும் ஒவ்வொருவரும் எங்களோடு சுமந்து செல்ல வந்துள்ளோம்.

அந்த இலட்சியம் நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று. அதை நிறைவேற்றுவதற்கு முன்னர் மரணங்களை நாம் குறைத்துக் கொள்வதற்கு கடுமையான செயல்களை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவது அதற்காக கடுமையான உழைப்பு தேவையாக இருக்கின்றது. போராளிகள் மட்டும் அல்ல தேசவிடுதலையை அவாவி நிற்கும் தேச மக்கள் அனைவரும், சுதந்திரத்தை அவாவி நிற்கும் தமிழீழ மக்கள் அனைவரும், தமிழீழத்திலும் தமிழீழத்திற்கு அப்பாலும் நின்று அந்தச் செயற்பாட்டை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த இருவருடைய மரணத்திலும் ஒன்று தெளிவாக இருந்தது. பாதுகாப்பின்மை, அந்த பாதுகாப்பை வெறுமனே போராளிகள் தங்களிற்கு தாங்கள் அமைத்துக் கொள்ள முடியாது. அந்தப் பாதுகாப்பை பொதுமக்களும் அவர்களிற்கு வழங்க முன்வர வேண்டும். தமிழீழ மக்களை பாதுகாப்பதற்காக போராளிகளும் போராளிகளைப் பாதுகாப்பதற்காக மக்களுமாக தமிழீழத்திலும், உலகம் அடங்கிலும் ஏற்படவேண்டும். இன்று இங்கு இவர்களிற்கு அஞ்சலி செலுத்த வந்திருக்கும் அனைவரிடமும் இதைத்தான் நாங்கள் அவர்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம். எங்கள் ஒவ்வொருவருக்காவும், எங்களின் வாழ்வுக்காவும், சுகத்திற்காகவும், விடுதலைக்காவும் தமிழீழ மண்ணிலே அல்லல்பட்டுக் கொண்டு இருக்கும், காடுகளிலே அலைந்து கொண்டு இருக்கும் அனைத்தையும் இழந்த மக்களின் வாழ்விற்காக உழைத்து மாவீரர்களாகிப் போன இவர்கள் மீது நாங்கள் சத்தியம் எடுத்துக் கொள்வோம்.

தமிழீழப் போர் ஓயும் வரையும் விடுதலை அடையும் வரையும் நாங்கள் இன்னும் வேகமாகச் செயற்படுவோம். இவர்கள் இருவரையும் எங்களில் சுமந்து கொண்டு தமிழீழத்தில் ஏற்படும் அழிவுகளைக் குறைப்பதற்கும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் கடுமையான ஊக்கம், தளராமை, ஓய்வு, சோர்வு எதுவுமே இல்லாமல் செயற்பட்டவர்கள். அவர்கள் எங்களிற்கு முன்னுதாரண புருசர்களாக இருக்கின்றார்கள். அதை நாம் எமது மனங்களில் சுமந்து கொண்டு தொடர்ந்தும் எமது போராட்டதை நகர்த்துவோம். நாங்கள் வெற்றி அடைவோம். எங்களின் நாடு எங்களிற்கு கிடைக்கும் அதில் எமது மக்கள் சுபீட்சமாக வாழ்வார்கள்.

https://tamileelamarchive.com/



# நெடும் பாலம் அமைத்த இரு வீரர்கள்

எமது வாழ்வில் நாம் எத்தனையோ பேரைச் சந்தித்திருக்கின்றோம். ஆனால் இவர்கள் அனைவருமே எமது நெஞ்சங்களில் நிரந்தரமாக இடம் பிடிப்பதில்லை.

சிலருடன் மிகக் குறுகிய காலம் மட்டுமே பழக நேரிடுகின்றது. ஆயினும் அவர்களை வாழ்நாள் முழுவதுமே மறக்க முடிவதில்லை.

நான் கஜனை நேரில் கண்டு உரையாடியது ஒரேயொரு தடவை மட்டுமே! அவருடன் மனம் விட்டுப் பேசியதும் ஒரு மணிநேரத்திற்கும் குறைவாகவேதான். ஆயினும், இனிமையும், எளிமையும், செயற்திறனும் மிக்க அந்த இளைஞனை என்னால் எப்போதுமே மறக்க முடியாது.

முதன் முதலில் அவர் என்னுடன் தொடர்பு கொண்டது தொலைபேசி மூலமாகத்தான். ஈழமுரசின் முதற் பிரதிக்கு நான்தான் சிறுகதை எழுத வேண்டும் என அவர் விடுத்த அன்பு நிறைந்த, ஆனால் அவசரக் கட்டளைக்கு இணங்க நான் 'துலாமரங்கள்' சிறுகதையை எழுதினேன்.

அக் கதையில், மாவீரன் ஒருவனுடைய தங்கை, தனது வாழ்வில் முக்கியமானதொரு கட்டத்தைத் தீர்மானிக்க வேண்டிய ஒரு இரவில், தனிமையில், தன் அண்ணன் தங்கள் தோட்டத்தில் நிறுவிய துலாமரத்துடன் அணைந்தவாறு நின்று, வானிலே தெரியும் விண் மீன்களைப் பார்க்கின்றாள். தமிழீழத்தின் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் தமது இன்னுயிர்களை ஈந்த ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் அங்கே வானில் சுடர் விடுவதாக அவள் காண்கின்றாள். அதேசமயம் வலிமையாய், திண்ணியமாய், நெடியதாய் நிற்கும் துலாமரத்தின் ஸ்பரிசம் அவளுக்குத் தன் அண்ணனின் துணிவையும், உறுதியையும், வலிமையையும் உணர்த்துகின்றது. அப்போது, அந்த பனிப்பெய்யும் நள்ளிரவிலும் கண்விழித்துக் கடமையாற்றும் புலிவீரர்கள் செல்லும் வாகனத்தின் உறுமல் அவளுடைய காதில் விழுகின்றது. அந்த ஒலி 'அண்ணன் இறந்துவிட்டானா? இல்லையா!... இதே ஆயிரம் ஆயிரம் அண்ணன்மார் உனக்கு உண்டு!..... அவர்களின் பாதையில் துணிந்து நட!' எனக் கூறுவதுபோல உணர்ந்து அவள் தன் வாழ்க்கையின் திசையைத் தெளிவுடன் தீர்மானிக்கின்றாள்.

நாதனும், கஜனும் மறைந்த செய்தி கேட்டு ஒரு கணம் திக்குற்றுப் போனேன். விடுதலைப் போர் வியூகத்தில் பல கேந்திர முறைகள் உண்டு. அவற்றில் ஒன்று விடுதலை வேள்விக்கான நிதி, இன்னொன்று, தணலாகக் கனன்றுகொண்டிருக்கும் விடுதலை வேட்கையை அனலாக மூட்

https://tamileelamarchive.com/



டும் பணி. இவ்விரு கேந்திர முனைகளின் முன்னணி நாயகர்களான நாதனும், கஜனும் மறைந்தது எம் இனத்துக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்புக்களாகும்.

ஆனால் நிதானமாகச் சிந்திக்கையில், தம் இளவயதில் மறைந்த இவ்விருவருமே தத்தம் பணிக்கென புத்தம் புதிதான இளம் தலைமுறையினரை ஆயத்தம் செய்வதிலும் மிகவும் அக்கறையுடன் இருந்துள்ளனர் என்பதை என்னால் உணர முடிகின்றது. எனது கதையில் வந்த அந்தத் தங்கையின் மனதில் தோன்றிய எண்ணமே இப்போது எனக்கும் எழுகின்றது. ஆம்! நாமறிந்த நாதனும், கஜனும் இன்று எம்மிடையே இல்லைத்தான். ஆயினும் அவர்களின் அடியொற்றி நடக்க ஆயிரம் ஆயிரம் தம்பியர், தங்கையர் நம் மத்தியிலே உண்டு என்ற நினைவில் ஓரளவு நிம்மதி காண்கின்றேன்.

'பாலம்' மாத இதழை ஆரம்பித்த போது, அதன் முதல் இதழுக்குமே என்னுடைய சிறுகதை வேண்டும் எனக் கஜன் கேட்டிருந்தார். அதை எழுதிய நாட்களில், நான் ஒரு சமயம், இங்கு டென்மார்க்கில் கடலுக்கு மேலாக நிறுவப்பட்டு, வேலை முடியும் தறுவாயில் இருக்கும் ஒரு நெடும் பாலத்தைக் காண நேர்ந்தது.

இதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கையில் ஏழெட்டுப் பேர்கள் இறந்துள்ளனர். கோடிக்கணக்கான பணம், அயராத உழைப்பு என்பன கொண்டு இப்பாலத்தை டென்மார்க் மக்கள் அமைக்கின்றனர். இப்பாலம் கட்டியமைக்கப்பட்டதும், அதைப் பயன்படுத்துபவர்கள் செலுத்தும் பணம் மூலம், இப்பாலத்துக்கான செலவை ஒரு குறிப்பிட்ட வருடங்களில் மீளப் பெற்றுக் கொள்வார்கள். அதாவது இப் பாலத்திற்கான விலை கொடுத்துத் தீர்க்கப்பட்டுவிடும். அதன் பின்னர் இப் பாலத்தைப் பயன்படுத்துவது இலவசமாகும். கஜனையும், அவர் ஆரம்பித்து வைத்த பாலத்தையும் எண்ணுகையில், நீலக் கடலின் மேலாக ஓங்கி உயர்ந்து நிற்கும் இந்த நெடும்பாலத்தின் ஒழுங்கமைதிமிக்க அழகு எனக்கு நினைவுக்கு வருகின்றது.

உயிரின் விலை என்ன..? உயிருக்கு விலையுண்டா? உயிருக்கு விலையே இல்லை! விலை என்பது என்ன? ஏதாவது ஒன்றை நாம் அடைய வேண்டுமானால், அதற்காக நாம் செலுத்த வேண்டிய கிரயத்தையோ அல்லது உழைப்பையோதான் நாம் விலை என்கிறோம்.

ஒருவன் தன் சினேகிதனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதுதான் எல்லாவற்றிலும் மேலான அன்பு என்று இயேசு சொன்னார். உயிர்ச் சினேகிதன் என்பவன் உறவுகளிலும் மேம்பட்டவன். இடுப்பிலிருக்கும் உடை நழுவ நேர்ந்தால் நம்மை அறியாமலே நமது கை ஓடிவந்து நழுவும் உடையை இறுகப் பற்றிக் கொள்ளும். அந்தக் கை போன்றவனே உண்மையான நண்பன் என்றார் வள்ளுவர். இப்பேர்ப்பட்ட சினேகிதனுக்காக உயிரைக் கொடுப்பது மேன்மையான காரியந்தான். ஆனால், அதைவிட பல படிகள் அதிக

https://tamileelamarchive.com/



மான, விசாலித்த, அன்புத் தியாகமாக இருப்பது ஒருவன் தன் இனத்தின் எதிர்காலச் சந்ததிக்காகத் தன் உயிரை அர்ப்பணிப்பதுதான்!

இந்தப் பல்லாயிரக் கணக்கான அன்புத் தியாகிகள் வரிசையிலே இன்று நாதனும், கஜனும் இணைந்து கொண்டனர். தினமும், ஒவ்வொரு நிமிடமும் இந்த உயிர் அர்ப்பணிப்பு நிகழ்ந்துகொண்டே இருக்கின்றதல்லவா!

நம்மில் எத்தனைபேர் இந்த உயிர்த் தியாகத்தை உள்ளபடி உணர்கின்றோம்? கண்ணுக்கு மை தீட்ட உதவும் கோலை அக் கண்ணானது மை தீட்டப்படும் வேளையில் காண்பதில்லை என்ற உவமையை வள்ளுவர் ஓரிடத்தில் மிக நேர்த்தியாகப் பயன்படுத்தி இருக்கின்றார்.

இன்று எமது கண்ணுக்கு மிக அருகில், மாவீரர்களின் இரத்தத்தினால் எமது இனத்தின் வரலாறு எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றது. எம்மில் பலர் இந்த மாபெரும் சங்கதியை மிகவும் சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்கின்றோமா? சங்கதிகள் சரித்திரமான பின்னர்தான் ஆகா, ஓகோ என்று உச்சியில் வைத்துக் கொண்டாடுவது உலக வழக்கா?

விலையெதுவும் கொடுக்காமலே நாம் அனுபவிக்கும் விஷயங்களை மிக இயல்பாகவே, 'சும்மா' கிடைக்கும் ஒரு சங்கதியாக நாம் கணிப்போமானால், நமக்கும் நாலுகால் பிராணிகளுக்கும் வித்தியாசமில்லையே!

இன்று டென்மார்க்கில் அமைக்கப்படும் நெடும்பாலத்தை எதிர்காலத்தில், இன்றைய டென்மார்க்கின் எதிர்காலச் சந்ததிகள் இலவசமாகவே உபயோகிக்கப்போவது உண்மை. அப்போதெல்லாம் அவர்கள் தமது முந்தைய சந்ததியினரின் விவேகத்தையும், உழைப்பையும், தியாகத்தையும் நிச்சயம் நன்றியுடன் நினைவுகூர்வார்கள்.

தமிழீழம் என்பது வெறும் கனவல்ல! அது, டென்மார்க்கின் நெடும் பாலத்தைப் போன்று இன்று எம் கண்முன் உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு நிதர்சனம்! வார்த்தைகளில் சொல்ல முடியாத துன்பங்களின் மத்தியில், கண்ணீரும் இரத்தமும் சிந்தியவாறு இன்று எமது சுதந்திர தாயகம் எழுந்து கொண்டிருக்கின்றது!

இதை அடைவதற்கு நாமோ, நமது பிள்ளைகளோ பாத்தியதை உடையவர்களா? வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் எம் போன்றவர்களின் எதிர்காலச் சந்ததியினருக்கு, இந்த நாடுகளில் அமையப்போகும் வாழ்க்கை அவர்களது தனித்தன்மையை, ஆளுமையை அழிக்காமல் இருக்குமா? அவர்களுக்கென ஒரு சொந்தத் தேசம் அவசியம் என்பதை நாம் எல்லோருமே உணர்கின்றோமா? அல்லது இந்த உண்மை எமக்கு இன்னமும் உறைக்கவில்லையா?

தாய்மண்ணில், தமது உயிர்களைத் தாரைவார்த்துப் போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வாலிபனும், யுவதியும் வெளிநாடுகளில் வாழும் தம் இனத்தினரையிட்டு மிகப் பெரும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

https://tamileelamarchive.com/



அந்தத் தூய இதயங்களின் நம்பிக்கையை நிறைவுசெய்யும் வகையில் நாம் எதைச் செய்கின்றோம்? எம்மால் எதைச் செய்ய முடியும்? என்பன பற்றி எமக்கும், உலகெல்லாம் பரந்து வாழும் தமிழினத்துக்கும் தெளிவாகத் தெரிவிக்கும் பணியில் கஜனும், நாதனும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் அவர்கள் பெருமளவு வெற்றியையும் பெற்றிருந்தார்கள் என்பதற்கு அவர்கள் கொலையுண்டதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?

எமது இதயங்களை மேலும் நெகிழச் செய்கின்றது. இவர்களுக்காக நாம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். கவிதைகொண்டு அஞ்சலி செய்கின்றோம். தீபமேற்றி வணங்குகின்றோம்.

இவை மட்டும் போதுமா? இவை வெறும் சடங்குகளாகிப் போய்விடக் கூடாது!

இங்கு வெளிநாடுகளில் வாழும் நாம் ஒவ்வொருவரும் நமது தாயகமாம் தமிழீழத்தின் தூதுவர்கள் என்பதை நாம் மறக்கலாகாது. நாம் இதை உணராவிடினும் இங்குள்ளவர்கள் எப்போதுமே, எம்மை ஈழத் தமிழர்களாகவே காண்பார்கள். அன்னியராகவே நடத்துவார்கள். எமது நடத்தைகள் எம்மை மட்டிலுமன்றி எமது தாயகத்தையும் பிரதிபலிப்பவையாய் அமையும் என்பதனை நாம் எப்போதுமே நினைவில் வைத்திருத்தல் அவசியம்.

எனவே, எமது மக்கள் மத்தியிலும், எமக்கு நெருங்கிய வெளிநாட்டவர் மத்தியிலும், நாம் எமது மக்களின் துன்பத்தைக் கூறுவோம், எமது விடுதலைப் போரின் நியாயத்தை விளக்குவோம், அதற்கான நிதியைத் திரட்ட முன்நிற்போம், சிங்கள அரசு கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து எமது இனத்தையிட்டு வெளிநாடுகளில் செய்துவரும் பொய்ப் பிரச்சாரங்களை நாமே முன்னின்று முறியடிப்போம்! என மாவீரரை எண்ணி உறுதிகொள்வோம்!

அதுவே நாம் அவர்களுக்கும், எம் தாயகத்துக்கும் செய்யும் மேலான சேவையாகும்!

- அ. பாலமனோகரன்

★★★

https://tamileelamarchive.com/



# உணர்வுகள் அடங்கித் தூங்காது

இனத்துக்கு ஈனம் என்றதும்
எரிமலை போல் எழுந்தவன் பேரின்பநாதன்
எம் மண்ணிற்காய் தன் வாழ்நாளை ஈய்ந்து
உயர் பணி ஆற்றிட்டவன் இந்த நாதன்
இவன் குணத்திலே குலோத்துங்கன் - தமிழ்
ஈழக் கொள்கையிலோ கரிகாலன்
உலகத் தமிழர் பணத்துக்குப் பொறுப்பாளன்
விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொருளாளன்
விடியலுக்காய் பாரிசில் விடிய விடிய உழைத்த சீராளன்
விடுதலைப் புலிகளின் வீரசாதனைகளின் பங்காளன்
வேங்கைகளின் வேட்கை களத்தில் கையோங்க
தனம் திரட்டி தளம் சேர்க்கும் காவலன்
தமிழ் மானம் தரணி மெச்ச வைத்த தீரன்
தமிழரில் இலட்சத்தில் ஒருவன்
தமிழீழ விடுதலையே தன் உயிர் மூச்சு
தாயகமே தன் வாழ்வு என்று
துணிந்திட்ட நாதன் கந்தையாவே - உன் மீது
கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்
நிச்சயமாய் நேர்மையான ஒருவரால் நடந்திருக்க முடியாது
பச்சோந்திகளாய் இருந்திருக்க வேண்டும் - அன்றி
பலராடிப் பெற்ற பேரங்காடிகளாய் இருந்திருக்க வேண்டும்
பாவம் என்பது பண்பல்ல
யார் இன்று பாரிசில் யார் என்ற கேள்வி?
பலமாக எழவேண்டும் பைந்தமிழா பார் எங்கும் கேள்
பாரென்று வந்து புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழனுக்கெதிராக
பாரிசிலும் கூட பலநிறக் கைக்கூலி
பேருடம்பை ஈய்ந்த நாதனவன் பேரவா நிறைவேற
வேர்விட்டு வளர்ந்து விழிப்பாய் உழைத்திருப்போம்
உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்கு அமெரிக்கர் அனைவரதும்
கண்ணீர் அஞ்சலி காற்றோடு கலந்து வருகிறது.

https://tamileelamarchive.com/



தனிவழிப்போன கஜன் கந்தையா நீ நிஜ கஜன்
நாம் அறிந்தது நினைவா கனவா?
ஈழமுரசின் இணையற்ற இயக்குனர் எங்குற்றாய்?
உங்கள் இருவரின் இழப்பு என்றும் ஈடு செய்ய முடியாதது
இதை உணர்ந்தே எதிரி ஊடுருவி இருக்கிறான்
எம்மினமே எம் சனமே இதை என்ன என்பீர்!
எம் இதயம் வெடிக்கிறது உறுதியும் பொறுதியும் தருகிறது
ஆன்மாக்களோடும் பேசிடும் நாள் வரும்
இலட்சியம் தமிழ் ஈழம் இடையில் எவை வரினும்
எம் உணர்வுகள் அடங்கித் தூங்காது
அடைந்தே தீருவோம் எம்மின விடுதலை என்று கூட
அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உலகத்தமிழர்
எங்களின் செந்நீர் சொட்டும் கண்ணீரால்
இந்த இறுதி அஞ்சலி சமர்ப்பணம்!

உ.த.ஒ.குழு
(அமெரிக்கா)

★★★

https://tamileelamarchive.com/



# புகலிட எழுத்தாளர் மகாநாடு

நான் பேச்சாளன் அல்ல; ஆகவே அதிகம் பேசமாட்டேன். புலம் பெயர் எழுத்தாளர் மகாநாடு இங்கு டென்மார்க்கில் நடைபெறுவது மகிழ்ச்சி தருவதாக உள்ளது. வெறுமனே படைப்பாளிகள் கூடிக் கதைத்துவிட்டு கலைந்து செல்வதற்கான சந்திப்பாக இல்லாது விவாதத்தின் ஊடாக பரிமாற்றங்களைச் செய்து அதனூடாக ஒருமித்த முடிவுக்கு வந்து படைப்பாளிகள் ஒன்றுபட்டு செயற்பட முயற்சித்து இதனை ஒழுங்கு செய்திருந்த ஈழத்தமிழர் கலையரங்கம் பாராட்டிற்குரியது. சில வாரங்களுக்கு முன்னர் லண்டனிலும் இப்படியொரு மாநாடு நடந்ததாக கேள்விப்பட முடிந்தது. இன்று இங்கு நடைபெறுகிறது. ஆங்காங்கே நடப்பதைவிட ஓர் இடத்தில் அனைவரையும் ஒன்று கூட்டி கருத்துப் பரிமாற்றம் செய்வது இன்னும் ஆரோக்கியமாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். புகலிடப் படைப்புக்கள் என்பதை நாம் எந்தளவு ஆழமாகச் செய்திருக்கின்றோம் என்பது கேள்விக்குரியதொன்று. கொஞ்சக் காலத்திற்கு முன்னர் ஒவ்வொரு நாட்டிலும் பல சிற்றிதழ்கள் அதிகமாக வெளிவந்தன. காலப்போக்கில் அவற்றைக் காணக்கிடைக்கவில்லை. காரணம் என்ன என்று தேடும்போது, ஒன்று, பொருளாதாரப் பிரச்சனை, இன்னொன்று சிறு குழுக்கள் சார்ந்து அந்தப் பத்திரிகை வெளிவந்தமை. இவற்றின் காரணமாக மக்களின் இன்றைய நிகழ்கால தேவைகளை, எம் வாழ்வு பற்றிய பதிவுகளை விட்டுவிட்டு வெறும் சித்தாந்தம் சார்ந்ததாகவும்



https://tamileelamarchive.com/



இப்பத்திரிகைகள் வந்தமைகூட, இவை மிக விரைவில் காணாமல் போனதற்கு காரணமாக இருக்கலாம். புகலிட எழுத்துக்கள் எமது இந்த வாழ்வை பதிவு செய்தல் வேண்டும்.

இங்கு முகம் கொள்ளும் சமூக கலாச்சார அகபுற முரண்பாடுகளை பதிவு செய்ததாக இருத்தல் வேண்டும். ஆனால் நாம் அதை ஓரளவுக்காவது முழுமையாக பதிவு செய்திருக்கிறோமா? இவைகளை நாம் மீள் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. இங்குள்ள எழுத்தாளர்கள் புகலிட வாழ்வை பதிவுசெய்ய வேண்டி உள்ளதுடன், அதனூடாக அந்தத் தளத்தில் நின்று எம் தேசத்துப் போராட்டத்தை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். ஆனால் எம்மில் பெரும்பாலானோர் என்ன செய்கின்றோம்? இங்கிருந்தபடியே அநேகமாக நாம் கண்ணால் காணாத சம்பவங்களை எல்லாம், அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை எல்லாம் பக்கம் பக்கமாக எழுதுகின்றோம். ஆனால் மனதில் ஒட்டிக்கொள்வதில்லை. எமக்குத் தெரியாததை, படைப்பாளியின் அனுபவத்திற்கு உட்படாத ஒன்றை படைக்க முயலும் போது நாம் அதில் தோல்வியை தழுவிச் செல்வதை தவிர்க்கமுடிவதில்லை. ஆக நாம் போராட்டத்தின் பால் அதற்கு வலுச் சேர்க்கும் முகமாக இலக்கியத்தை படைக்க முற்படும் போது இங்கு இருந்தபடியே கற்பனையில் எமது தேசத்தை பார்த்து எழுதுவதை விடுத்து இங்குள்ள எமது வாழ்வனுபவங்களூடாக இணைத்து விடுதலை நோக்கி எமது படைப்புக்களை முன்னிறுத்துவது ஆரோக்கியமானது என்பது எனது அபிப்பிராயம். அத்துடன் இறுதியாக புகலிட நாடுகளில் உள்ள எழுத்தாளர்களில் பலர் தமது பேனாவை மூடிவைத்து விட்டார்கள்; என்னை நீங்கள் கோபிக்க மாட்டீர்கள் என்பதால் இதைக் கூறுகிறேன்; இயந்திரமயமான வாழ்க்கைக்குள் எழுதுவதற்கான நேரத்தை ஒதுக்குவது மிகவும் கஸ்ரமாக இருக்கின்றது என்பதை பல நல்ல எழுத்தாளர்களும் மூத்த எழுத்தாளர்கள் கூறி உள்ளனர். இதனால் உண்மையில் எழுத்தின் மீது படைப்பிலக்கியத்தின் மீது அதிக அளவிலான அக்கறை உள்ள ஆர்வமுள்ள இந்த புலம் பெயர்ந்த படைப்பாளிகள் தமது சோம்பல்களை ஒதுக்கி வைத்து விட்டு, அவசர வாழ்வினுள்ளும் அதை பதிவு செய்வதற்கு சிறிதளவு நேரமாவது ஒதுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

*(23-12-1995 அன்று, டென்மார்க் நாட்டில் நடைபெற்ற 'புகலிட எழுத்தாளர் மாநாட்'டில் மாவீரர் கஜன் அவர்கள் ஆற்றிய உரை)*

★★★

https://tamileelamarchive.com/



# தோட்டாக்களுக்கு ஒரு வார்த்தை

மூன்றே மூன்று நாட்கள்
உன்னுடன்.....
லாச்சப்பல் தெருக்களில்
அந்த மூன்று நாட்களில்
எத்தனை விஷயங்களை
என்னுடன் பகிர்ந்து கொண்டாய்?
உன்னுடனான இப் பகிர்வினால்
என்னைச் சுற்றியுள்ள
பொய்களையும்
போலிகளையும்
துரோகிகளையும்
வேடதாரிகளையும்
என்னால் இனங்காண
முடிந்தது.
எப்படி என்கிறாயா?
உன்
மன தைரியத்தையும்
சிந்தனைத் தெளிவையும்
நேர்மையையும்
நாட்டுப் பற்றையும்
தியாகத்தையும்
கண்டதால் தான்
தான் வாழ்ந்தால் போதும்
தன் குடும்பம் வாழ்ந்தால் போதும்
எவனை அழித்தாவது
தன்னை மட்டும் வாழ வைக்கும்
சுயநலங்களைக் கண்டே
களைத்திருக்கையில் தான்
எங்கிருந்தோ வந்தாய்
நான் விதிவிலக்கென்றாய்

https://tamileelamarchive.com/



உனக்கென ஒரு குடும்பம்
உனக்கென ஒரு ஆசை
உனக்கென ஒரு வாழ்க்கை
என்றில்லாமல்
அயராத உன் உழைப்பினால்
இலட்சிய வீரனாய்
தியாக தீபமாய்
எத்தனை மனங்களில் பிரகாசிக்கின்றாய்?
மிகக் குறுகியகாலத்தில்
எப்படி உன்னால் சாதிக்க முடிந்தது?
எப்படி உன்னால் மரணிக்கவும் முடிந்தது?
என் ஆசைத்தம்பியை....,
என் அன்பு நண்பனை
பலியெடுத்த தோட்டாக்களே!
நீங்கள்
காலங்காலமாய்
நல்லவர்களையே பதம் பார்த்தது
போதும்.
இனியாவது
நாசகாரர்களைத் தேடிப் போங்கள்
எம் இனத்தின் விடிவுக்காய்
எம் நல் வாழ்வுக்காய்
தம்மையே மறந்து போராடும்
எம் மண்ணின் மைந்தர்களை
விட்டு விடுங்கள்.
கஜனின் மரணம்
உங்களுக்கொரு பாடமாய் அமையட்டும்!

- மல்லீஸ்வரி ஆதவன்
(டென்மார்க்)

★★★

https://tamileelamarchive.com/



# எங்களுக்காய் நீங்கள்
# உங்களுக்காய் நாங்கள்

எங்களுக்காய்...
தமிழீழத் தேச மக்களான எங்களுக்காய்...
எங்கள் தேசத்தைவிட்டு பல்லாயிரம் மைல்கள் சென்றும் கூட
அங்கும் எங்களுக்காய்...
அல்லும் பகலும் நாளும் பொழுதும் ஊனும் உறக்கமும் கூட
மறந்து எங்களுக்காய்...
தேசமெங்கும் ஓடித்திருந்து தேசமொன்று நாமமைக்க
உழைத்த உத்தமர்களே

நாதனே! கஜனே!

உங்களுக்கு எங்களை விட்டு பிரிவென்பதில்லை
தமிழீழத் தேசக் காற்றாய் எம்மோடு நீங்கள்
தமிழென்னும் இனியமொழியாய் எம்மோடு நீங்கள்
தேசத்தலைவன் பிரபாகரனின் பேச்சாய் நீங்கள்
தியாகத் தலைவன் கிட்டுவின் வாரிசாய் நீங்கள்
எம்மோடு எம்மில் எம் உணர்வில்
உங்களுக்கு எங்களை விட்டு பிரிவென்பதில்லையே

ஆனாலும் நண்பர்களே!

நாதனே நீங்கள் ஓடி ஆடி தூக்கமும்
தேக்கமும் இன்றி நிதிப்பொறுப்பை வகித்ததினால்
சிதறியது சிங்கள இராணுவத்தின்
சிங்கக் கொடிக் கப்பல்கள் பல
எம் மக்கள் உயிர் குடித்த
கொலைகார இராணுவத்தின்
உயிர் குடித்த வீர வரலாற்றின்
இயக்கச் சக்திகளில் நீங்களும் ஒருவர்

https://tamileelamarchive.com/



உங்கள் பணியின் நிறைவால்
எங்கள் பலம் பன்மடங்கு பெருகியது
உங்கள் உழைப்பின் பயன்
எங்கள் எதிரி முல்லைத்தீவில்
முக்கி முனகிக் கொண்டு
செத்தழிந்த தமிழீழ வரலாறு

'யுத்தத்தால் சமாதானம்'
யுத்தவெறிக் கோசமென்று
தேசமெங்கும் தமிழர்கள்
வேகமுடன் சொன்னதினால்
தங்கள் கண்ணில்
மண் தூவிவிட்டார்
சந்திரிகா என்றே
கண்ணைக் கசக்குகிறார் உலகத் தமிழ் மக்கள்

ஓராண்டு காலமாய்
பேயாட்சி வேண்டாம்
பெருமையுடன் தமிழாட்சி
தமிழீழப் புலியாட்சி வேண்டுமென்று
வன்னிப் பெருநிலத்தில்
பெரும் விடுதலைக்காய்
இயற்றும் எம் மக்கள்
உணர்வு அழிக்க
உணவு மறுத்து
உறைவிடமும் தான் மறுத்து
மருந்தும் கூட தடுத்து
சந்திரிகா சதிராட்டமாடும்
கோர தாண்டவத்தின்
ஓராண்டு நெருங்குகையில்

உலகெங்கும் வாழும்
தமிழ் மக்கள் ஒரு கீறலாய்
ஒருவாரம் சர்வதேச
விழிப்பு வாரமாய்

https://tamileelamarchive.com/



'மறந்ததோ வையம்
மறத்தமிழர் தன்னை'யென்று
பொங்கி எழத்திட்டமிட்ட
வேளையிலே

கோழைத்தனமாய்
பேடிகள் செயலாய்
சந்திரிகா அரசின்
சர்வாதிகார இரணிப்பாடாப்
சர்வதேச பயங்கரவாதத்து
நடைமுறைச் செயலாய்
உங்களைச் சுட்டனர்
பாரிசில் கொலைகார
சந்திரிகா கோஸ்டியினர்
என்னே கொடுமை

எங்கள் தமிழ்மொழியின்
வளமான எழுத்தாளன்
சொல்லும் செயலும்
நீதிக்காய் குரல்கொடுக்க
வெல்லும் சத்தியம்
வீழும் பொய்மைகள் என்றே
ஈழமுரசு அறைந்து
பாரெங்கும் தமிழ் மக்கள்
நிலை உரைத்த பத்திரிகையாளர்
கஜனையும் கொன்றிட்ட
கொடுமையிது

மன்னிக்க முடியாத
சர்வதேச குற்றம்
மறந்திட முடியாத
வரலாற்று ஊனம்
வெருட்டிட முடியாத
விடுதலை உணர்வு – கொண்ட
மக்களை
கொலைவெறி செயல்களால்!

https://tamileelamarchive.com/



அன்பு என்ற சொல்லுக்கு – கஜன்
என்று கூறுமளவிற்கு
மாற்றானையும் மனிதனெனக் கருதும்
பெருங்குணப் பெட்டகம்
தமிழர் துயர் கூறத் தானே – தொடங்கியது
ஈழமுரசு
அம்முரசின் ஓசையினால்
எழுந்த நம்மவர் பலர்
அவருக்கு பாலமாக
பாலம் இதழும் படைத்து
பாங்குடன் தமிழப்பணியும்
சமுதாயப் பணியும்
சாதித்த சரித்திரத்துடன்
எங்கள் கஜன்!

இரு செயற்பாட்டு வீரரையும்
செயலிழக்க வைக்க
சந்திரிகா அரசிட்ட சதித் திட்டம்
பாரிஸ் படுகொலையால்
உங்கள் உயிர் குடித்தது
எங்களுக்காய் நீங்கள்
உங்கள் உயிரையும்
தந்திட்ட உன்னத
வரலாற்று நிகழ்ச்சி

மனிதக் கொலையல்ல
இனக்கொலையே!
தமிழர் என்பதற்காய்
தேடியழிக்கும்
இராணுவ முயற்சியின்
வெளிநாட்டு வியாபாரம்

அரச பயங்கரவாதத்தால்
தமிழர் தாயகத்தில்
தமிழரை வதைக்கும்

https://tamileelamarchive.com/

## நெருப்புப் பறவைகள்

சிங்களப் பேயாட்சியின்
சர்வதேசப் பயங்கரவாத
கொடூர செயல்தான்
இக் கொலைகள்

ஆனாலும் தமிழீழச்
சிங்கள கொலைக்களங்கள்
ஆயிரம் ஆயிரம் போராளிகளை
உருவாக்கும் உணர்ச்சி
குகைகள் சந்திரிகா
புரிந்துகொண்டால் நன்று

எங்களுக்காய் நீங்கள்
உங்களுக்காய் நாங்கள்

நீங்கள் வீழ்ந்ததினால்
நாங்கள் எழுகின்றோம்
நீங்கள் செய்த பணிக்கு
எங்கள் வாழ்க்கை கடன்கள்
நீங்கள் நடந்த பாதையில்
நாங்கள் இனி நடப்போம்
ஆகையால் தான் கூறிகின்றோம்

எங்களுக்காய் நீங்கள்
உங்களுக்காய் நாங்கள்

தமிழீழ வரலாறு உள்ளவரை
அழியாது வாழ்வீர்!

—பற்றிமாகரன்

★★★

https://tamileelamarchive.com/



# நெஞ்சில் தஞ்சமிட வந்த பூ!

ஒரு துயரம் எப்படியோ நடந்து விட்டது. வாழ்வு பற்றி பயந்தவர்களும் பயப்படாதவர்களும் 'துயரம்' என்பது என்னவென்று அறியும்படியாய் அவனது மரணம் எப்படியோ ஆயிற்று.

யாரால் எதற்காக ஏன் என்ற கேள்விகள் எல்லாம் சோக்கிரட்டீசுடன் 'அக்ரோபலிஸ்' புதையுண்டு போய்விட்டன.

அதனால்தானோ என்னவோ அவன் நஞ்சை தானே அருந்தி மரணித்தான்

ஒரு அறிவற்ற, புத்தியற்ற, மனிதன் என்று சொல்லக்கூட முடியாத, ஒரு அற்பஜீவியால் தனது மரணம் சம்பவிக்கக்கூடாது என நினைத்தான் 'சோக்கிரட்டீஸ்'

அந்த நேரத்தில் 'கஜனி'டமும் ஒரு நஞ்சுப்புட்டி இருந்திருந்தால் அவனும் தானே அருந்தி மரணித்திருப்பான். அவ்வளவு தூரத்திற்கு அறிவின்பால் அவன் நம்பிக்கை கொண்டிருந்தான். மரணம் பற்றிப் பயந்தது கிடையாது.

அவர்கள் 'போலிச் சமூக அந்தஸ்து' பற்றியும் கவனிப்பதில்லை

'மிதப்பு' விதியைக் கண்டுபிடித்த 'ஆக்கிமீடீஸ்' நிர்வாணமாய் வெட்கமின்றி 'ஏதன்ஸ்' தெருக்களில் ஓடினான். சில அறிவாளிகளிடம் அபூர்வமாய் சில போர்க்குணங்களும் அமைவதுண்டு.

அந்தப் போர்க்குணம் ஒரு சமூத்தை – அதனது தளத்திலிருந்து விடுவித்து அடுத்த கட்டத்துக்கு நகரவைக்கும்.

இந்தப் போர்க்குணம் 'லெனினிடம் இருந்திருக்கிறது. 'மாஓ'விடம் இருந்திருக்கிறது.

இந்தப் போர்க்குணத்தினால்தான் இவர்கள் புரட்சியாளர்கள் என இன்றுவரை உலகின் எல்லா முற்போக்குவாதிகளும் போற்றப்படுகிறார் கள்.

இத்தகைய ஒரு 'போர்க்குணாதிசயம்' கஜனிடம் இருந்தது.

பல புரட்சியாளர்களும், முற்போக்குவாதிகள் என தம்மை முத்திரைகுத்திக் கொள்பவர்களும் 'கஜனின்' அனுபவப்பாடங்களை நிறையவே கற்க வேண்டும்.

'கஜனை'யும் அவனது சாதனைகளையும் பின்வரும் கோணங்களில் பார்க்கலாம்.

- ஒரு நல்ல மனிதன்
- புலம் பெயர் அவலத்தை நேசித்தவன்

https://tamileelamarchive.com/



* 'பாலம்' அமைத்தவன்
* கருத்துச் சுதந்திரத்தை மதித்தவன்
* பண்பான பத்திரிகையாளன்

இன்னும் பல்வேறு கோணங்களில் அவனைப் பார்க்கமுடியு மெனினும் எனது வசதிகருதி இப்படிப் பார்க்கிறேன், அடுத்து 'கஜனை' 'அவன்' என நான் அழைப்பது பற்றியும் வாசகர்கள் மன்னிக்க வேண்டும். 'அண்ணா' எனக் குழையக் குழைய வந்த 'தம்பி'யை அவன் எனத்தான் என்னால் அழைக்கமுடியும். திடீரென பாரிஸில் இருந்து உதித்த ஒரு தம்பியாய் அவன் மாறிவிட்டான். நான் எதிர்பார்க்காத அளவு பாசத்தைப் பொழிந்தான். மகா சோம்பேறியான என்னை எழுத வைத் தான் நடுநிசியில் 'ரெலிபோன்' அடித்து 'அண்ணா எழுதி முடியுங்கோ' என்பான். எப்படித்தான் அவனால் இப்படி இருக்க முடிந்ததோ? பல அதிசயங்களையும் ஆச்சரியங்களையும் மிகக்குறைந்த காலத்தில் அவனிடம் நான் பெற்றுக்கொண்டேன். 'இவன்' இப்படித் திடீரென என்மேல் அன்பைப் பொழியிறானே ஏதேனும் இசகு பிசகுக்குள்ளை என்னை மாட்டப் போறானோ' என்ற சந்தேகம் கூட ஆரம்பத்தில் எழுந்தது. அந்தச் சந்தேகம் எனக்கு வந்திட்டுது என உணர்ந்து, அதை ஒரு நொடிப்பொழுதில் தூள்தூளாக்கினான். எந்தத் தடையும் இல்லாமல் என்னோடு உண்டான், உறங்கினான், விழித்தான், நடந்தான்.

பாரதியாருக்கு 'எல்லாம்' கொடுத்த குவளைக்கண்ணனை 'எங்கி ருந்தோ வந்தான் கண்ணன்' என பாரதியார் பாடியது போல நானும் ஒரு நாள் எனக்குள் கஜனைப் பற்றிப் பாடியதுண்டு. அப்படிப் பட்ட கஜனை, நான் 'அவன்' என்றழைப்பதில் தப்பேதும் இல்லை என நினைக்கிறேன்.

'புலம் பெயர் இலக்கியம்' பற்றி பல்வேறு வகையான கருத்துக்களைக் கொண்டிருந்த போதிலும் புலம்பெயர் இலக்கியம் என்பது புலம்பெயர் நாட்டில் நாம் பெறும் அவலம் எனவும் அதை எவ்வாறு தாயக அவலத்துடன் இணைக்கலாம் என்பது பற்றியும் தீவிர சிந்தனையுடை யவனாய் கஜன் வாழ்ந்திருந்தான். அந்தச் சிந்தனையின் வெளிப்பாடு தான் 'பாலம்' என்பதனைப் பலரறிவர் 'பாலத்'திற்காகக் கடுமையாக உழைத்தான். 'பாலம்' யாவருக்கும் ஒரு இலக்கியக் களமாக அமைய வேண்டும் என்ற கருத்தில் அவன் வேறுபாடு கொண்டிருக்கவில்லை. 'மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் எமது ஈழத் தமிழுலகுக்குக் காணாது அண்ணா, அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்' என்று கூறினான். தேடித் தேடி புத்தகங்களையும் பிறநாட்டு அறிஞர்களின் பெயர்களையும் சொல்லுவான்.

நானும், அவனும் மற்றுமொரு நண்பனும் ஒரு முழு இரவும் Rene Descartes என்ற பிரெஞ்சு தத்துவஞானியின் (நவீன மெய்யியலின் தந்தையென அழைக்கப்படுபவரும், ஐயவாதத்தின் ஆரம்பகர்த்தா என வர்ணிக்கப்படுபவருமாவார்) தத்துவங்களைப் பற்றிப் பேசிக்கொண்

https://tamileelamarchive.com/



டோம். அப்பொழுது கஜன் சொன்னான் 'நீங்கள் இதை உடனடியாக இலகு தமிழில் எழுதித் தந்தால் 'பாலத்'தில் கட்டாயம் தொடர்ச்சியாக நான் வெளியிடுவேன்' என்று.

அவ்வளவு தூரத்திற்கு அவனிடம் ஆழமான அறிவும் அதை உடனடியாகத் தமிழுலகத்திற்கு அறியத்தரவேண்டும் என்ற உத்வேகமும் ஊறியிருந்தது. இந்த வகையில் தமிழ் அறிவுலகத்திற்கு கஜனின் இழப்பு பாரிய இழப்பாகும். நல்ல படைப்புக்கள் எதுவாயினும் அது எந்த மொழியில் இருப்பினும் அதை யார் எழுதினாலும் களம் ஒன்றைப் 'பாலம்' அமைக்கும் என்று அடித்துச் சொன்னான். சிங்கள மொழிப் படைப்புக் களைகூட என் மனைவி மூலம் மொழி பெயர்க்கத் தூண்டினான். குர்தானிய எழுத்தாளர் அடில் அடாமை (சரஜீவாவில் ஒரு பொம்மை' குறுநாவலை டெனிஸ் மொழியில் எழுதியவர்) தமிழில் அறிமுகப்படுத்துவதற்குக் (என் மனைவியூடாக) களம் அமைத்துக் கொடுத்தவன் கஜனே!

சினிமா பற்றிய ஆழமான மிக அகன்ற கட்டுரைகளுக்கு இப்படி ஒரு களம் இதுவரை தமிழில் இருந்ததில்லை. இந்தக் களத்தினை அமைத்த கஜனின் இழப்பு ஈடுஇணையற்றது.

★ புலம்பெயர் இலக்கியம்
★ தாயக இலக்கியம்
★ முற்போக்கு இலக்கியம்
★ புலி இலக்கியம்
★ புலி எதிர்ப்பு இலக்கியம்

இவ்வாறாக எம்மவர்கள் பல குழுக்களாக இயங்கிவரும் இவ்வேளையில் எல்லோரது கருத்துக்கும் சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களது படைப்புக்கள் வெளியில் வரவேண்டும் அதற்கு ஒரு பொது புதுக்களம் வேண்டும் எனக்கருதி அதற்கான ஒரு வேலைத்திட்டமாகப் 'பாலம்' அமைத்து இரவு பகல் பாராது அதற்கென உழைத்த ஒரு உன்னதமான கஜனை தமிழ் கூறும் இலக்கிய உலகம் இன்று இழந்து நிற்கிறது.

ஒரு சமயம் நான் ஜேர்மனியில் விடுமுறைக்குச் சென்றிருந்த போது – அங்கு ஒரு விளையாட்டுப் போட்டி நடைபெற்று. அதன் பரிசு விபரங்கள் 'ஈழமுரசு' பத்திரிகையில் வெளிவந்திருந்தன.

நான் எனது உறவினர் வீட்டிலிருந்தேன் ஜேர்மனியில் வசிக்கும் எனது தங்கைமுறையானவள் ஓடோடி வந்தாள். வந்து, தான் அந்த விளையாட்டுப் போட்டிக்குப் போனதாகவும் அதில் பரிசு பெற்ற 'நகரத்தின்' பெயர் பிளையாக 'ஈழமுரசி'ல் வெளியாகியுள்ளது. இவங்கள் இப்படித்தான் பொய்யன்கள் என்று பொரிந்து தள்ளினாள்.

நான் அவளை இடைமறித்து நீ சொல்வது உண்மையாயின் உடனே 'ஈழமுரசு' பத்திரிகை அலுவலகத்திற்கு ரெலிபோன் பண்ணி உனது

https://tamileelamarchive.com/



உண்மையைச் சொல்வதுதான் முறை. அதை விட்டிட்டு அவங்கள் பொய்யங்கள், அது இது என்று குழுறுவதால் தேவையில்லாத முடிவுகளும் ஏற்படலாம் என்றேன். உடனே அவள் 'ஈழமுரசு'க்கு ரெலிபோன் பண்ணினாள். அந்த நேரத்தில் கஜனே அங்கிருந்து ரெலிபோனை எடுத்தான்.

"அக்கா, செய்திகளைத் தொகுத்துத் தந்தவரில் பிழை நடந்திருக்கலாம். அல்லது 'நகரம், சிறுநகரம்' பற்றிய ஜேர்மன் பெயர்களில் மாறுதல் நடந்திருக்கலாம். நாங்கள் அதைக் கட்டாயம் கவனிக்கிறோம். தவறினைச் சுட்டிக் காட்டிய உங்களுக்கு மிகவும் நன்றி' என்றான்.

ரெலிபோன் 'மைக்கை' நான் அழுத்திப் பிடித்திருந்தமையால் பலரும் ஒரு பத்திரிகையாசிரியனின் பண்பான குரலைக் கேட்டனர்.

நான் பல பத்திராதிபர்களை எனது வாழ்நாளில் பார்த்திருக்கிறேன். இவ்வளவு அமைதியாகவும் ஆறுதலாகவும் தெளிவாகவும் பண்பாகவும் நீதியாகவும் பதிலளித்த ஒரு பத்திரிகையாசிரியரை நான் சந்தித்ததே இல்லை.

அடுத்த 'ஈழமுரசில்' அந்தத் தவறு திருத்தப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கஜனைப் பற்றி நிறைய நிறைய எழுதலாம். நினைக்க நினைக்க அவனது அயராத உழைப்புத் தெரிகிறது. எதற்காக அவன் உழைத்தான்? யாருக்காக?

வாழ்வுக்கு எந்த விதமான உத்தரவும் இல்லாது வாழ்வு போய்க் கொண்டிருக்கிறது.

எனது தாயகத்தை நான் வாழ்ந்த மண்ணை மீட்க இன்னும் இன்னும் எத்தனை எத்தனை பூக்கள் வேண்டுமாம் அந்த அரக்கிக்கு?

– ஆதவன்

(டென்மார்க்)

★★★

https://tamileelamarchive.com/



# வேற்றுருவில் வருவீரோ?

அவசர மனிதரால் அமுங்கிய சாலை
அங்கும் இங்குமாய் அவரவர் வேலை
பம்பரமாய் சுழல் பாரீசு நகரம்
பார்த்திருக்கும் போதில் பகலோடிப் போனது
காலனும் வந்து காத்து வழி கிடக்க
விடுதலை நிலவுகள் வீதிக்கு வந்தன
இலையுதிர் காலத்து இருளாகும் பொழுது
பாரீசின் வீதியில் பலி வீழ்ந்து போனது.

பூக்களைச் சுட்டனர் பேடிகள் யாரடா
பூகமழ் மணமினி போகுமோ சாகுமோ
வாய்மையும் சாயவோ வஞ்சகர் யாரடா
வரலாறு துடைத்திட தூசெனப் போகுமோ
அந்நிய தேசத்தில் அவசர வாழ்விலும்
சொத்தோ சுகமோ தேடினீர் இல்லை
பேச்சிலும் மூச்சிலும் விடுதலை உரைத்த
பேரிடி இன்று அடங்கியா போனது.

தாய்நிலம் கடந்தும் பலர் தனக்காய் வாழ
நோய் என்று கூட நொந்ததும் இல்லை
துட்ட மதியோரால் தேசத்தில் தீயெழ
எட்ட நின்று நீர் வார்த்த மேகங்கள் நீங்கள்
இருளோட்ட வந்த சுதந்திர நிலவுகள்
எங்களின் வானத்தில் எப்போது வருவீர்கள்
சுடுகலன் சுமக்காத சுதந்திர வீரர்கள்
தூயவரே வேற்றுருவில் எப்போது வருவீர்கள்.

போர்பூமி நீங்கி புறப்பட்டு வந்தால்
தொப்புள் கொடியுற தொலைந்தா போகும்
புலம்பெயர் வாழ்வின் பொய்மைகள் அறுத்த
போராளி கஜனின் பேனா போர்வாள்
நாடுகள் எங்கலாம் நாதன் திரட்டிய
நிதியெல்லாம் அங்கு நீசரைத் தடுக்கும்
ஆயினும் எதிரிக்கு அறைந்து சொல்வோம்
வெட்ட வெட்ட தழைத்து வெல்வோம்.

https://tamileelamarchive.com/



# கட்டியணைத்து முத்தமிடும் நண்பர்களுக்கு...

நாதன், கஜன்!

இவர்கள் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்பதனை இன்னும் ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் உள்ளது. இவர்களுக்கு நேரிலேயே வீரவணக்கம் செலுத்திய பின்பும் கூட, இவர்கள் பாரிஸ் மண்ணிலே விதைக்கப்பட்ட காட்சியினை நேரிலே கண்ணுற்ற பின்பும் கூட இவர்கள் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள் என்பதனை நம்பமுடியாமல் தான் உள்ளது.

சற்று ஓய்வாக அமர்ந்திருந்து சிந்திக்கத் தலைப்படும் போதெல்லாம் இவர்கள் என்னைச் சூழ அமர்ந்து கொள்கிறார்கள். வழமை போல மிகுந்த நட்புறவுடனும் இலட்சிய உறுதியுடனும் செய்ய வேண்டிய பணிகள் குறித்துப் பேசிக்கொள்கிறார்கள். எமது மக்கள் படும் துயரங்கள் குறித்தும், எமது மக்கள் விடுதலையடைய வேண்டியதன் அவசியம் குறித்தும், அதற்காக நாம் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் நிறையவே பேசிக்கொள்கிறார்கள்.

போராட்டத்திற்கான நிதிப்பலம் மேலும் பெருக வேண்டும் என நாதன் இடைவிடாது சொல்லிக்கொண்டிருக்கிறான். எம்மைக் கொன் றொழித்தவர்களின் முகத்தில் காறி உமிழ்ந்தவாறு போராட்டத்தின் நிதிப்பலத்தினை பெருக்குங்கள் என்று ஆசையாக கன்னத்தைத் தடவிச் சொல்கிறான் நாதன். எமது மக்களின் அவலங்களை சர்வதேச அரங்கிலே உரத்து ஒலிக்க வையுங்கள் என்று அன்போடு அணைத்து நின்று சொல்கிறான். எமது போராட்டத்தின் நியாயங்களை அனைத்துலகம் புரிந்துகொள்ள வைக்க ஓய்வு ஒழிச்சலின்றி உழையுங்கள் என்று உரிமை யுடன் உத்தரவிடுகிறான்.

எமது மக்களின் துயரங்களை அனைத்துலகத்தின் கவனத்திற்கு முன் கொண்டுவருவதற்காக, சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் தொடர்பான வேலை களின் தனது பங்கினை முழுமையாக்க முடியாமல் போனதையிட்ட கவலை அவனிடம் தெரிந்தது. தான் ஆரம்பித்த சில வேலைகளைத் தன்னால் முடித்துவைக்க முடியாமல் போன சோகம் அவன் கண்களில் இருந்தது. இருப்பினும் அவனது புன்சிரிப்பு அவனிடம் இருக்கவே செய்தது. மற்றவர் துயரத்தினைத் தனது துயரமாகக் கொள்ளும் இளகிய மனசும் அப்படியேதான் இருந்தது. நண்பர்களிடம் அவர் காட்டும் பாச உணர்வும் பொங்கி எழத்தான் செய்தது. 'நான் என்றும் உங்களுடன் இருப்பேன்; உங்கள் செயற்பாடுகள் வெற்றியடைய தேவையான உந்து சக்தியினை வழங்கிக்கொண்டிருப்பேன்; தமிழீழத் தாயின் விலங்குகள் உடையும் வரையும் நானும் ஓயப்போவதில்லை' என உறுதியாகக் கூறிக் கொண்டிருந்தான் நாதன்.

கஜன் வழமை போல, அன்பாக 'அம்மான்' என அழைத்தான். தனது மனதிலே உள்ள எண்ணங்களை எல்லாம் கொட்டித் தீர்த்தான். 'ஈழமுரசு

https://tamileelamarchive.com/



தொடர்ந்து வருவதில் மகிழ்ச்சி என்றான். எழுத்துப் பிழைகள் குறைவாக இருந்தமை குறித்தும் ஆனந்தப்பட்டான். பத்திரிகை மேலும் தரமாக வேண்டும் என்றான். 'பாலம்' விரைவாக வெளிவர வேண்டும் என்று அழுத்திக் கூறினான். தான் செய்வதற்குத் திட்டமிட்ட விடயங்களை செய்து முடிப்பதில் நண்பர்கள் கொண்ட உறுதியினை இட்டுத் திருப்தி தெரிவித்தான். நண்பர்கள் பற்றியெல்லாம் நிறையவே விசாரித்தான். தங்களைப் 'பயங்கரவாதிகள்' என்று கூறி தங்களுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்குத் தடைவிதிக்க முயன்ற சிறீலங்கா அரசின் அற்பத்தனத் தினை நகையாடினான். தங்களைப் பிரிந்து தனித்துப் போய்விட்டேனே என்ற எண்ணம் ஏற்படுகிறதா என்று பாசம் பொங்கக் கேட்டான். 'கலங்காதீர்கள்' என்றான். தன்னுடைய கண்களை நன்கு உற்றுப் பார்க்கக் கூறினான். அக்கண்களிலிருந்து வரும் ஒளியினை உள்வாங் கச் சொன்னான். உடலில், உள்ளத்தில் புதுப்பலம் வருகிறதா என்று கேட்டான். அப்படியே நெருங்கிவந்தான். அன்பாக அணைத்துக் கொண்டான்.

கஜன் என்னை அணைத்துக்கொண்ட போது, தொலைபேசி கதைப் பதற்காகச் சற்றுத்தூரம் தள்ளிச்சென்றிருந்த நாதன் அருகில் வந்தான். அவனும் என்னை வாஞ்சையுடன் தழுவிக்கொண்டான். நானும் இருவரையும் இறுகத் தழுவிக்கொண்டேன். வழமை போல எவ்விடயம் என்றாலும் தயக்கமில்லாது திறந்த மனதுடன் கலந்து பேசுவது போல நாம் பேசிக்கொண்டேயிருந்தோம். நேரம் போவது தெரியாது பேசிக் கொண்டே இருந்தோம்.

இவர்கள் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்பதனை இன்னும் ஏற்றுக்கொள்ளமுடியாமல்தான் உள்ளது. இவர்களுக்கு நேரிலே வீரவணக்கம் செலுத்திய பின்பும் கூட, இவர்கள் பாரிஸ் மண்ணிலே விதைக்கப்பட்ட காட்சியினை நேரிலே கண்ணுற்ற பின்பும் கூட இவர்கள் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்பதனை நம்பமுடியாமல்தான் உள்ளது.

இவர்கள் என்னுடன் வாழ்வதனால் நான் மிகுந்த உற்சாகம் உடையவ னாக மாறுகிறேன். இவர்கள் என்னை கட்டித் தழுவிக்கொள்வதினால் நான் புத்தெழுச்சி பெற்றுக்கொள்கிறேன். இவர்களது குரல் என்னுடன் உறவாடிக்கொண்டிருப்பதினால் எனது கடமைகளை ஓய்வு ஒழிச்ச லின்றிச் செய்வதற்கு நான் தூண்டப்படுகிறேன்.

அன்பு நண்பர்களே! உங்கள் நினைவுகளுடன் கடமைகளைத் தொடர்கிறேன். வேலைகள் கூடிச் செல்வதனால் உங்களுடன் உறவாடு வதற்கான நேரம் குறையக்கூடும். உங்களுக்கும் நண்பர்களுடன் உறவாடு வதில் நேரம் கரைந்துவிடும். எனினும், ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணி நேரமாவது எனக்காக ஒதுக்கி வையுங்கள்.

அன்புடன்
நண்பன்
த. சர்வே

https://tamileelamarchive.com/



# எங்களின் மூச்சில் உங்களின் காற்று

இயந்திர வாழ்வின்
இறுக்கமும் இரைச்சலும்
வாழ்க்கைச் சக்கர
நெரிசலின் நசிவும்
போர்த்திய மாயப் பொய்வலை உள்ளும்
விடுதலைப் பண்ணை செவிகள் சுவைத்தன.
உயிரின் பாடலை உள்ளம் இசைத்தது.

இங்கும் இதற்கு முடிந்தது இவர்களால்

குளிரின் காற்றில் உதறிடும் கூதலில்
தேகம் வியர்த்திட உள்ளம் எரிந்தது.
நாட்டு நினைப்பு!
தேசம் பற்றி எரிகின்ற நேரத்தின் தவிப்பு!!

சிட்டுக்குருவிபோல் எங்கும்
கொத்திச் சேர்த்த குறுமணிதன்னை
பொத்திப் பொத்தி சேர்விடம் சேர்த்த செயலாளன்.
பூமிப்பந்தின் இங்கும் அங்கும்
சுற்றிப்பறந்து பொருளினைச் சேர்த்த விடுதலைச் சிட்டு.
திரைகடல் ஓடித்
திரவியம் சோர்வுறாப் பணியாளன்.

நாமும் நம்மிடையுள்ள யாவும்
நாட்டுவிடுதலை நாட்டிடவென்றே
நாட்டி நின்றவர்.

எழுத்தும் பேச்சும்
ஆக்கமும் ஊக்கமும்
நம்மிடை உள்ள ஆற்றலும் உழைப்பும்

https://tamileelamarchive.com/



யாவும்... யாவையும்
விடுதலை ஊட்டமே என்றுரைத்த
விடுதலைச் சிட்டுக்கள்.

உயிர்க்கொல்லி பார்வையில்
விடுதலைப் பட்சிகள் எப்படிச் சிக்கின..?
கடல் தாண்டி நீண்ட நாசக்கரம்
ஆழவேரோடி நீர்தேடித்தந்த
ஆதாரவேர்களை அறுப்பதென்பது
எப்படிச் சாத்தியம்...?

நேற்றும் எம்மோடு
தோழமை கொண்ட விழிகள்
மூடிக்கிடந்தன.
எங்களின் விழிகளில் கண்ணீர்
நெடுங்கிடையாய் கிடைந்த தேகம் கண்டு
நெஞ்சை அழுத்திச் சோகம் அழுதது.
ஏன் இப்படி..? எதற்காக.?

விம்மிவெடித்து..
உள்ளிளுத்த மூச்சில்
உங்களின் சுவாசம்! வாசம்!!

ஒன்று விழ ஒன்பதாய் எழும்
விடுதலைக்களத்தில் புதைந்த விதைகளே!

உங்களின் நினைவு தாங்கி
எதிரியின் இதயம் வலிக்க உரைக்கின்றோம்.
விடுதலை விருட்சம் வீழ்ந்து விடாது!
இன்னும்...இன்னும் அது
கடினபாறைகளை ஊடறுத்துக்கொண்டு வேர்விடும்!
பீறிட்டெழும் நீரின் மிகையால்
இன்னும்.. இன்னும் அது செழிப்புறும்!!!

ஜெயா

https://tamileelamarchive.com/



# இரு கவிதைகளின் முகவரை

இலையுதிர் காலத்தின் இரவுகள் உதிர்வின் சோகத்தை எப்பொழுதுமே பேசிக்கொண்டிருக்கும்.

மஞ்சள் ஆறாய் மரங்கள் தெரிய தங்க நிற இலைகள் காற்றுக்கு உதிர்ந்து வீதியில் விழுந்து கொண்டிருந்தன. ஒரு துயரிசைப் பாடலுக்கான மெட்டுக் கட்டுவது போல காற்றுக்கு ஆடி அசைந்து கொண்டிருந்தன. பனிக்காலங்களில் வெள்ளித் தகடுகளாய் நிற்கும். கோடையில் பசுமையில் செழித்துக் குலுங்கும். இரவில் கருமை போர்த்தி துயரில் அழும். இடையில் மஞ்சளாறாய் மின் விளக்குகளின் ஒளியில் அசையும். கஜனுக்கும் இந்த மரங்களுக்கிடையேயும் ஒரு வித நட்பு இருந்தது. அவனே என்னிடம் சொல்லியிருந்தான், 'என்னவோ தெரியாதடா. எனக்கும் இந்த மரங்கள் மீது ஒரு காதல் தான் அது தான் என் கவிதைகளில் கூட வெளிப்பட்டு நிற்கின்றன'.

இப்போது கஜன் மரங்களைப் பற்றி பேசியதைப் பற்றியும் மரத்துக்கும் தனக்குமான தொடர்பு பற்றி பேசியதை நினைக்கையில்,

மரங்களின் பண்பு பற்றிய ஒரு பாடல்தான் ஞாபகம் வருகிறது.

வீழ்ந்து விட்டாலும் மரம்
விறகென உதவும் பண்பு
வாழ்ந்து கொண்டிருக்கும் போது
மனிதராம் நம்மில் இல்லை
மரம் பல சேர்ந்தால் தோப்பு
மனிதர்கள் அது போல் சேர்வோம்
உரம் பெறும் மரத்தைப் போல
உறுதியை மனத்தில் கொள்வோம்
வெட்டினால் மேலும் மேலும்
வளர்வது மரத்தின் மாண்பு
பட்டு நாம் துயருற்றாலும்
பொறுமையாய் உயர்வைக் காண்போம்

இந்த பண்புகளின் அடிப்படையை வைத்துக் கொண்டுதான் தனக்கும் அந்த மரங்களுக்குமிடையிலான தொடர்புகளைப் பற்றி பேசினானா? என எனக்குள் கேள்வி எழுகின்றது.

வரண்ட, பசுமைகளற்ற கட்டிடக்காட்டுக்குள் முகமிழந்த மனிதர்களோடு வாழ்க்கையில் அவற்றுடனான தொடர்பும் அதிகம் தான். கானல் நீராகி விட்ட வாழ்க்கை. அக்கரைக்கு இக்கரை பச்சை என்றாகி விட்ட கதையின் மாந்தர்கள் கட்டிடக் காட்டின் திக்கும் திரிந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சோகம் உளத்துக்குள் ஒலித்தபடி. இருளும், ஒளியும் மாறி மாறி உரசும் வீதிச் சந்துகளிடையே

https://tamileelamarchive.com/



காதலின் உரசலும், கழிப்பின் குரலும் காற்றில் மோதின. வானுயர்ந்த கட்டிடக் காட்டின் சாளரங்கள் அடைபட்டுக் கொண்டன. இலைகளை உதிர்க்கும் வண்ணமாக நின்ற மரக்கிளைகள் இடைக்கிடையே இருளும், ஒளியும் பூசிக் கொண்டு காற்றுக்கசைந்தன. அப்போது வீதியில் பெற்றோல் குடித்த மிருகங்கள் ஊளையிட்டபடி ஓடிக் கொண்டிருந்தன.

நாதன் அசாத்தியமான துணிச்சல்காரன். கடுமையான உழைப்பாளி. 'நாதனை ஏன் இஞ்ச கூட்டிக் கொண்டு வந்தனீங்கள்? உங்களில் யாராவது வந்திருக்கலாம் தானே! அந்தாளின்ர முகத்தைப் பார்த்தாலே யாரும் சும்மா ஒளிக்கேலுமே?' பிரதேசங்களில் நிதிசேகரிப்பு வேலைகளில் ஈடுபடும் போது மக்களில் சிலர் இப்படிப் பேசிக்கொள்வார்கள். அவ்வாறு அவர்கள் பேசுகின்ற அளவுக்கு நாதனது நல்லுணர்வு வெளிப்பாடுகள் அலைக்கழிக்கச் செய்யவோ, நாளை பார்க்கலாம் என்று சொல்லி விடவோ விடுவதில்லை. அது அவனிடம் உள்ள தனிப்பண்பு.

எந்த நேரமும் சீண்டி விளையாட்டாகப் பேசியும், பகிடிகள் விட்டும், தனது ஆழ்ந்த சோகங்களைச் சொல்லி அழுதும், சிரித்தும், பழகியும் எம்மைக் கொள்ளை கொண்டிருந்தான் கஜன். நன்றாக கதை சொல்லுவான். ஒரு சமயம் வானத்தில் நிலவு சோம்பேறியாக தூங்கிக் கொண்டிருந்தது. பனிக்கால இரவில் காற்று முடங்கி விறைத்தபடி கிடந்தது. வீதிகளால் பாதசாரிகள் போய்க்கொண்டிருந்தார்கள். வாழ்வை வெறுத்தவர்களும் அனேகம் பேர் போனார்கள். தங்கள் பாட்டுக்குப் பேசியபடியும், சிரித்தபடியும், அல்லது யாரையோ திட்டித் தீர்த்த படியும் போய் கொண்டிருந்தார்கள். உளத்தில் கவலை மிகும். ஏதோ திரிகிறார்கள். யுத்தங்களின் போது அருமைத் தாயை, அருமைத் தந்தையை அவர்கள் இழந்திருக்கக் கூடும். சிறுவர்களாய் இருந்த போதில் பட்ட காயங்களின் பாதிப்புக்கள் பின்னாளில் அவர்களின் வாழ்க்கையில் பெரும் சோகத்தை கொடுத்திருக்கக் கூடும். கிழிந்த கந்தலாடைகளுடனும், அழுக்கேறி தூர்நாற்றம் வீசும்படியாகவும் இருந்த ஒரு வயோதிபக் கிழவன் எதிர்ப்பட்டு 'சிகரட்டிருக்கா? எனக்கொன்று தருவாயா?' என்று கேட்டான். அவன் சிகரட்டைப் பெற்றுக்கொண்டு 'நன்றி, நன்றி' என்று கூறிக்கொண்டும் வாழ்த்திக் கொண்டும் போகையில், இன்னொருவன் எதிர்ப்பட்டான். அவன் பொஸ்னிய அகதி மனிதனாக இருக்க வேண்டும். ஒரு பாடலைப் பாடிவிட்டு சில்லறை கேட்டான். அல்ஜீரிய பெண்மணி ஒருத்தி ரெலிகாட் கேட்டாள். எல்லோருக்கும் கஜன் பதில் சொல்லிக் கொண்டிருந்த பண்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கும் கதை சொல்லிக் கொண்டிருந்தான். அது அவனுடைய வாழ்க்கைச் சரிதம். கேட்டுக்கொண்டு இருந்தேன்.

"அப்பருக்கடா என்னைக் கண்டால் பத்திக்கொண்டு வரும். 'இரவானா வீட்டிற்கு வந்திருக்கச் சொல்லு' என்று அம்மாவிடம் சத்தம் வைப்பார். நானும் பயங்கர குழப்படி தான். என்னோட நேர கதைக்கமாட்டார். அம்மா அப்பா சொல்லுறதை திருப்பி என்னிட்ட

https://tamileelamarchive.com/



சொல்லுவா 'இரவானா வீட்டில வந்திருக்கட்டாம் கண்டபடி சுத்தித் திரியவேணாமாம்' நான் பதிலுக்கு அம்மாவிடம் சொல்லுவேன். 'நான் பொம்பிளைப்பிள்ளையில்லையாம் எண்டு சொல்லு'. அம்மா அதனைத் திருப்பி அப்பரிடம் சொல்ல, அப்பர் 'அடிச்சுப் பல்லுக் கில்லு எல்லாம் கழட்டுவன். ஓ! கதைக்கு கதையா கதைக்கிறார்? படிப்பு, பாட்டெல்லாம் என்னெண்டு போகுதெண்டு கேள்'. அம்மா, 'படிப்பு பாட்டெல்லாம் என்னமாதிரியெண்டெல்லே கேட்கிறார். பதிலுக்கு நான் பரீட்சை முடிவுகளைப் பார்க்கிறவர்தானே. அதில ஏதாவது பிழை விட்டிருக்கிறனா? அப்படி பிழை விட்டிருந்தால்லோ இவர் என்னைப் பேசலாம்' என்று சொல்ல, 'உனக்கும், அவருக்கும் இடையில் நின்று மல்லுக்கட்டேலாது' என்று அம்மா அழுது கொண்டு போய்விடுவா. அம்மா, பாவம் மச்சான். என்ர அப்பருடைய சண்டைக்கு இடையில அம்மா நிண்டு பட்டபாட்ட இப்ப நினைக்க வேதனையா இருக்கு. அப்பரும் விடமாட்டார். பிடிச்சா பிடிச்சது தான். நானும் விடுறதில்லை" என்று சொன்னான். இவன் மிடுக்கும், துடுக்கும் நிறைந்தவன். சொன்னால் கேட்கிறானே. இவனின் குழப்படி, துடியாட்டம், இரவானா வீட்டிற்கு நேரகாலத்தோட வாறதில்லை, அதுவும் 1983–களில இராணுவம் இளைஞர்களை குறிவைத்துக் கொண்டு திரிந்த காலம் வேற, அது, இது என்று நிறைய விடயங்களைப் பார்த்திற்று. தகப்பன்காரன் இவனைக் கண்டிக்க வெளிக்கிட்டிருக்கிறார். அது கஜனுக்கு பெரிதாப் பிடிக்கேல்ல, பள்ளிக்கூடத்திலேயும் இருந்து காரசாரமான முறைப்பாடு, ஏதோ கர்த்தால் என்று இவனும் ஓடியாடித் திரிந்தது பிடிபட்டுப் போக, வகுப்பு ஆசிரியர் 'கந்தையா அட உன்ர பெடியனா?' என்று கேட்க நிலைமை மோசமாகிப் போயிற்று. தகப்பனார் கையில பாஸ்போட்டைக் கொடுத்து 'நீ வெளிநாடு போ!' என்று சொல்லிப்போட்டார். இவன் அதைக் கையில வாங்கிக் கொண்டு வந்து முற்றத்தில் இறங்கினான். தாய்ப்பூமியின் மீது விழுந்து, புரண்டு, எழுந்து, பாடி ஆடிக் கழித்து, மகிழ்ந்து திரிந்தவன். நிலவில் குளித்து, சூரியனின் சுடரொளிபட்டுச் சுடர்ந்து, கனன்று மழையில் நனைந்து, மணல் குன்றுகளில் இருந்து பேசி, மரநிழல்களில் உறங்கி, புற்தரைகளில் இருந்து பட்டம் கட்டி ஏற்றி, காதல்பாட்டுக் கேட்டு, கனிவுறு மொழி கேட்டு, அப்பு ஆச்சி கதை கேட்டு, இஸ்டம் போல எங்கும் ஓடித் திரிந்து, சின்னப் பாதம் மண்களில் ஒட்டித் தத்தித் தவண்டு, வளர்ந்து, நிமிர்ந்து, நின்று, நடந்து, கழித்த தாய்ப்பூமியை விட்டு பிரிதல் முடியாத் துயரின் வலி நெஞ்சை அழுத்த அடக்கி அடக்கி முடியாது போக 'என்ர அம்மா' என்று வாய் விட்டுக் கதறியழுதான். நாடு கடத்தப்படுவது போன்ற துயரம். தாய், கலங்கினாலும் தந்தையின் முடிவுக்கு அவன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். அப்படியொரு வைராக்கியத்தோடு வந்தவன் தான் கஜன். இந்த நாடுகளில் உழைத்துச் சம்பாதித்துக் கோட்டை கட்ட நினைத்தவன் அல்ல. தன் தாய் நாட்டுக்காக உழைத்தவன். அதற்கான சித்தம் அவனிடம் இருந்தது. தாய் நிலம், தாய் நாடு, தனது சிறிய செம்மண்

https://tamileelamarchive.com/



கிராமம், விடுதலை, சுதந்திரம், பிரபஞ்சம், கவிதை, பாட்டு, நாடகம், மனிதர், என்கின்ற விடயங்களுக்கப்பால் அவன் சுழன்றதே கிடையாது. அதிலும் இவன் கொண்ட தாய் மண் மீதான காதலை வார்த்தையில் வடிக்க முற்படுவேனாயின் நான் தோற்றுப் போகக் கூடும். அதை இன்னும் ஒலிக்கும் வண்ணமாக இருக்கும் அவனது பாடல்களில் காணலாம். 'தாய்நிலத்தை மறக்கலாமா' என்னும் பாட்டு அத்தகையதொரு உணர்வின் கானமே.

இவன் நாட்டை விட்டு வந்ததில் இருந்து தனிமையில் இருந்த காலங்கள் கூடுதலானவை என்றும், தனிமை ஒரு கொடுமையான நிகழ்வு என்றும் கூறுவான். தனிமை பற்றி தனக்கு நிறையவே தெரியும் என்று சொல்லும் அவன், "என்னதான் நான் சண்டை பிடிச்சாலும் உங்களோட தான் சுத்திச் சுத்தித் திரிகிறனான். மனுசர் வேணுமடா! இப்ப எல்லாம் நான் தனியத்தான், சிலவேளைகளில் வீட்டிற்கு வருவன். முன்னம் மாதிரியாய் இல்லை. யாரும் இப்ப இந்த வீட்டில பெரிதாய் இருக்கிறதில்லை. பாரன் தம்பிக்காரனும் வேலையள், பிரச்சினைள்ளை திரிவான். ஒருத்தரும் பெரிசா வாறதுமில்லை. எனக்கு இப்ப தனிமை தான். ஈழமுரசு தொடங்கினாப் பிறகு வேலைப்பளு அதிகமாப் போயிற்று. ஒரே வேலைகள், துன்பங்கள், துயரங்கள் என்று வாழ்க்கை தன்பாட்டுக்குச் சுழல்கிறது. துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஆட்களில்லை. அட, இப்ப இரவானாலும் இந்த வீட்டில சனசந்தடியில்லாமப் போச்சுது" என்று கூறி வேதனைப்பட்டான். ஒருத்தரும் இல்லையெண்டா விசராய் இருக்கும். நித்திரை வராது, ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டிருந்து விட்டு விடிய அப்படியே ஈழமுரசிலை போய் வேலைகள் பார்ப்பேன். இப்படியே கொஞ்சக் காலம் ஓடிற்று. இன்னும் ஒரு கொஞ்சக் காலம்தான் நாட்டுக்குப் போய்விடுவேன். இஞ்ச இருக்க மாட்டன். ஈழமுரசை நடத்துற அளவுக்கு கன பேரை உருவாக்கி விட்டிருக்கிறன். ஆனால் இந்தத் தனிமையைதான் என்னால் தாங்கிக்கொள்ள முடியுதில்லை. அவன் பேசிக்கொண்டிருந்த போது செயின் நதிக் கரை நின்ற மரங்கள் தூங்கிக்கொண்டிருந்தன. கப்பல்களின் ஒளியில் தோய்ந்த கணங்களில் அம்மரங்கள் அழகுறுவதும், பின் இருளில் ஒழிவதுமாய் இருந்தன.

வானத்து நிலவின் மகிமை இங்கு பெரிதாக தோன்றுவதற்கில்லை. வீதியில் எங்கும் வானத்து நிலவுகள் போன்ற வண்ண விளக்குகளின் ஒளியில் பாரிஸ் நகரம் தோய்ந்திருந்தது. குளிர்காற்று மோதி தலைமுடிகளைக் கலைத்தது. 'உனக்கு குளிரவில்லையா?' கஜன் கேட்டான்.

"ஏன் இல்லை எனக்கும் குளிர் தான்.

"நீ எங்கட முற்றத்தில இருந்து கூழ் குடிச்சிருக்கிறயா?"

"அதென்னடா வாழ்க்கை, விடு" என்று நிறுத்தி விட்டேன்.

https://tamileelamarchive.com/



மண்ணின் நினைவை மீட்டிய படியே கனவிலும், நினைவிலும், பேச்சிலும் நாங்கள் வாழ்வை ஓட்டிக் கொண்டிருக்கிறோமா என எனக்கு இப்போ எண்ணத் தோன்றுகிறது. அவன் அதன் காதலால்தான் மண்ணைப் பற்றிய பேச்சை அவ்வளவு உயிரோட்டமாகப் பேசினான்.

பொலிஸ்காரனுடைய கதையில் தொடங்கி, பக்கத்து வீட்டுக்காரன் வெறிஅடிச்சிற்று வந்து பாடுற சுருதி கெட்டுப் போன காதல் பாட்டுப் பற்றியும், நிலவு முற்றம் பற்றியும், கம்பராமாயாணம் பற்றியும், பாடசாலை வாழ்க்கை பற்றியும் நிறைய நிறையக் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு நல்ல புத்தகம் தான். மனிதனைப் பேசாதவை, பாடாதவை இலக்கியங்களா? இவன் மனிதர்களைப்பற்றிப் பாடியவன். பேசியவன். அப்படிப் பேசும் பொழுது மண்ணின் மணம் கமழ துடிக்கப் பேசுகின்ற கலை அவனிடம் இருந்தது. யாராவது அவனுடன் பேச்சுக் கொடுத்தால் அவ்வளவு சுலபமாய் விட்டு எழும்பிப் போகமாட்டார்கள். அதனால் நான் அவனை 'கதை சொல்லி' என்று அன்பாக அழைப்பேன். எங்களூரில் முன்னர் இவ்வாறு இலக்கிய நயம்படக் கதை சொல்லுபவர்கள் பலர் இருந்தார்கள். இப்பொதெல்லாம் அவ்வாறனவர்கள் இல்லை. அரிது யார் பெரிதாகக் கதைக்கிறார்கள். அதுவும் இங்க புலம்பெயர்ந்த நாடுகளில் நான் உண்மையில அப்படி அவனைப் போல ஒருத்தரையும் காணேல்ல. அவரவருக்கு ஆயிரம் கஸ்டமும், துன்பமும், நோயும் நொடியும் அலைச்சலும், ஓழிச்சலும் எண்டு பாடுற புராணம். அது கூட துன்பச் சுவையைக் கூட பெரிதாகத் தொடுவதில்லை. மொழி ஆளுமையும், பரந்த வாசிப்புத் திறனும், வேகமும், சதா தேடலுமாக இருந்த அவனது வாழ்க்கைதான் உயிர்ப்பின் செயற்பாடாக இருந்தது. அது உச்சாணியாகவும் விளங்கியது.

விடுதலைக்காக உழைப்பது என்பது மிகவும் சந்தோஷகரமான செயற்பாடே. அது மனிதனை ஆளுமையும் சக்தி மிக்கவனாகவும் ஆக்குகிறது என்பதற்கு எமது இரு தோழர்களும் உதாரண புருசர்கள். இவர்கள் எப்படி தம்மை வருத்திச் செயற்பட்டார்கள் என்பதை அநேகமாக புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் நேரில் கண்டிருக்கிறார்கள். இதன் பின்னணி என்ன? ஏன் கடுமையாக உழைத்தார்கள். ஏன் தூக்கமின்றி உரிய உணவுமின்றி இவர்கள் எந்நேரமும் சுழன்றார்கள்.

தாயகம் பற்றிய தேடலும், காதலும் அத்தகைய பரிமாணத்தை அவர்களுக்கு அளித்திருக்கிறது. இதனால் தான் அவர்களைப்பற்றிப் பாடுகிற போது

சூரியனை நோக்கிய
பறப்பின் போது
வெடியோசைகள் கேட்டன
வீழ்ந்தன இரு பறவைகள்

https://tamileelamarchive.com/



சூரியனை நோக்கிய என்கின்ற போது அவர்கள் வெவ்வேறான வீச்சோடு, தேசத்தின் விடுதலையை, மானுடத்தின் சுதந்திரத்தை ஆகர்சித்து நிற்கின்ற தன்மையை, இந்த வாழ்வியலுக்கூடாக சிறை உடைத்துச் செயற்பட்ட தன்மையைச் சித்தரிக்கவே அவர்களைப் பற்றி இந்த வரியை எழுதினேன்.

உண்மையில் விடுதலை இன்றி இருப்பதென்பது இருளுள் அடைபட்டுக் கிடப்பது போன்றதொரு கொடிய வாழ்வே. இவர்களால் அப்படி வாழ முடியாது. அவர்களைச் சிறைக்குள் இட முடியாது. அவர்கள் கொண்ட உணர்வு, வேகம், தாகம் அத்தகையதொரு செயற்பாட்டின் தளத்திலேயே அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியது.

இருவரது பணிகளும் வெவ்வேறான தளங்களில் இருந்தன. நாதனின் பணியின் தளம் வேறு. அதன் மீதுள்ள கஸ்ட துன்பங்களையும், சுமைகளுமே வித்தியாசமானவை. நாதன் இயலாது என்கிறது தன் அகராதியில் இல்லை என்ற போக்குடையவன். அதை அவன் செய்து காட்டியிருக்கிறான். வலிமையும் திடமும் இருக்கவேண்டும். மதிநுட்பம் இருக்க வேண்டும். இத்தனை ஆற்றல்களும் கூடிய அவரது செயற்பாட்டில் வெற்றிகள் இருந்தன. எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் போராட்டக் களங்களின் பல வெற்றிகளுக்குப் பின்னால் நாதனும் இருந்தான் எனக் குறிப்பிடப்படுகின்ற அளவு சக்திவாய்ந்தவனாக இருந்தான்.

இதனால்தான் எதிரியின் கண்களில் நாதன் ஒரு இலக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான். இந்த இடத்தை நிரப்பக் கூடிய ஒருவர் இத்தனை அனுபவங்களோடும், தியாகங்களோடும், அர்ப்பணிப்பு உணர்வுகளோடும் உருவாக வேண்டும். நீண்ட கால அனுபவத்தையும் அசையாத உறுதியையும் கொண்டிருந்தான்.

எங்களின் தோழர்களிடையே இந்த இருவரது இழப்பும் ஏற்படுத்திய தாக்கம் சதாரணமானதாக இருக்கமுடியாது. எங்கள் தோழர்கள் அழுதார்கள். இன்னும் எத்தனை நாட்கள் அத்தகையவர்களின் இழப்பால் துடிப்பார்கள் என்று சொல்ல முடியாது. துயரில் வதைப்படுகின்ற தோழர் சிந்தும் கண்ணீருக்கு விலை அதிகம். அது கூரிய வாளை ஒத்தது.

மனிதனுக்கு எத்தனை வித விதமான ஆசைகள், கற்பனைகள் எல்லாம் இருக்கிறது. தங்கத்தில் நகை அணிந்து கொள்வதற்கு, நல்ல வண்ணச் சட்டை போடுவதற்கு, எத்தனை, எத்தனை சின்ன ஆசைகள் உண்டு. இவர்களுக்கு இல்லையா? அதுவும் ஐரோப்பிய நாடுகளிலா கனவுகளுக்கு பஞ்சம். 'கனவுலகம்' திறந்திருந்தது. மாஜா ஜாலங்கள் எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற ஞானவான்களாக, வாழமுற்படுவதே கஸ்டம். இவர்கள் அப்படி வாழ்ந்தார்கள். தீயை மிதித்தார்கள். தங்கள் இளமையை நன்கு காத்து, புடமிட்டு, தங்களை ஒறுத்து, வீண்பராக்குகள் இன்றி விடுதலையே குறியாக, அதனை உளத்தில் அனுதினமும் பூசித்து, வளர்த்து

https://tamileelamarchive.com/



கஜன் என்னிடம் ஒருமுறை சொன்னான்:

எங்களுடைய போராளிகளைக் காவல் தெய்வங்களாகக் காண்கிறேன். விடுதலைத் தீயை தீயால் சுடமுடியாது. இவர்களில் கொண்டிருந்த வேகம் சாதாரணமான வேகமல்ல. கற்பனையில் பார்க்க முடியாது.

என்னோடு ஒரு கபே பாருக்குள் கஜன் பேசிக்கொண்டிருந்த போது சொன்னான், 'நான் கனகாலம் இருக்கமாட்டன் செத்துப் போயிருவன்". தனிமைகள் தந்த சோகம் கலந்த குயிலின் பாடலாய் அது ஒலித்தது. விடுதலையின் தரிசனத்தை கண்டு விடுகின்ற துடிப்போடு சாவு பற்றிச் சொன்னானா? கஜன் சாகமாட்டான். அவன் வாழ்வான். அவன் இனிச் சாகமாட்டான்.

'சுதந்திரக்கீற்று' நிகழ்வை தரிசித்து விட்டு வந்திருந்த இரவு கஜன் லாச்சப்பிலில் உள்ள ஓர் இடத்தில் தனிமையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ரயில்வண்டிகளை தரிப்பிடங்களில் கொண்டு வந்து நிறுத்தி வைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த ரயில்வண்டிகள் எல்லாம் ஏராளமான மக்களை ஏற்றிக் கொண்டு வேகமாக ஓடி ஒவ்வொரு நகரங்களையும் கடந்து, நாடுகளையும் கடந்து செல்வன. வயல்களை ஊடறுத்து, வாவிக்கரைகளில் திரியும் காற்றில் மோதி கூவிக்கொண்டு ஓடிய ரயில்களில் ஒன்று, அந்த அர்த்த ராத்திரியில் அவ்விடத்தில் வந்து நிற்கிறது. கஜன் அதைப்பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தச் சூழலின் பின்னணியும், அவனில் வீற்றிருந்த சோகமும், என்னை உலுக்கி எடுத்தது. "ஏன் இப்படியிருக்கிறாய் சொல்லடா?" எனக் கேட்டேன். ஈரித்த குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. கஜன் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தான்.

"என்னடா நீ அழுகின்றாய்? சொல்லன். ஏன் என்னிடம் சொல்லக் கூடாதா?"

"இல்லையடா கடன் பளுவும், வேலைப்பளுவும் என எத்தனையோ சுமைகள். என்னை நம்பியிருக்கின்றவர்கள் எல்லாம் என்ர முகத்தைப் பார்க்கிறார்களடா! அவர்களுடைய பிரச்சினைகள் எதையும் நான் தீர்த்தபாடாய் இல்லை" என்று கூறினான்.

உண்மையில் அவன் அப்போது பட்ட துயரை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவன், 'வா கபே குடிப்போம்' என அழைத்துச் சென்றான்.

கிட்டண்ணாவோடு வாழ்ந்த நினைவுகளைப் பற்றி அசை மீட்டான். 'அண்ணாவோட வாழ்ந்து பெற்ற எத்தனையோ அனுபவங்களை கொண்டு இதுவரையும் நாங்கள் பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லை. நாங்கள் பேசிக்கொண்டேயிருக்கிறோம். செயல் வடிவம் கொடுப்பதாக இல்லை. கிட்டண்ணாவிட்ட எத்தனையோ கனவுகளிருந்தன. எப்படி எப்படியெல்லாம் அவர் கற்பனை கண்டார். தேசத்துக்காக என்ன என்ன செய்ய சிந்தித்தார். நாங்களோ அவற்றைப் பற்றிய கவலை சிறிதும் [illegible] இருக்கின்றோம்' என்றான்.

https://tamileelamarchive.com/



அவன் பேசுகின்ற போது உருக்கொள்ளும் விதமாகவே பேசுவான். அந்தப் பேச்சு செயலூக்கத்தையும், புத்தெழுச்சியையும் தரும். வேலை செய்யாமல் இருப்பதை அவன் கடுமையாகச் சாடுவதாக இருக்கும்.

நல்ல அழகிய ஆளுமைச் செயற்பாட்டாளனாக கஜன் உருவாகி வந்தான். பத்திரிகைத் துறையில் அவன் ஒரு மைல்கல் தான் என்பதை அவன் நிலைநாட்டிக் காண்பித்தான். அவனின் மீதான மதிப்பு எமக்கு அதிகமாகிக் கொண்டே போனது. எப்போதாவது எனக்கும் அவனுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றுவதுண்டு. எனது ஆரம்ப காலக் கவிதைகளில் இருந்த மிக இறுக்கமான செந்நெறிப்பாங்கான நடை குறித்து என்னோடு தர்க்கப்பட்டான். உனது கவிதையைப் படிப்பதற்கு மிகவும் கஸ்டப்பட வேண்டும் என்று குறிப்பிட்டான். ஆனால் அதே கஜன் எனது கவிதைகள் குறித்துப் பாராட்டிப் பேசியதோடு, எனது கவிதைகளை நூலுருவாக்க வேண்டும் என்றும் கூறினான். அதற்கான முயற்சிகளில் அவன் இறங்கி இருப்பதாக தெரிவித்த அவன், மச்சான்! நீ ஒரு கவிஞன் தான். நான் முகஸ்துதிக்காக சொல்லவில்லை" என்றும் சொன்னான்.

பாரிஸ் நகரத்தின் வீதிகளில் நாங்கள் இருவரும் அனேகமாக நடந்திருக்கின்றோம். முன்னர் எல்லாம் எங்களுக்கு சிறிது ஓய்வு நேரங்கள் இருந்தன. அப்போதெல்லாம் செயின் நதியின் கரையில் இருந்து பேசியிருக்கின்றோம். இலக்கியத்தைப்பற்றி, கவிதைகளைப்பற்றிப் பேசுவான்.

"அந்த திரைப்படம் பார்த்தாயா?"
"அந்தக் கட்டுரை படித்தாயா?"
"அந்தக் கவிதை படித்தாயா?"
"அந்த ஓவியம் பார்த்தாயா?"
"அந்த நாடகம் பார்த்தாயா?" கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டேயிருப்பான். "இல்லை இல்லை" அப்ப என்ன தான் செய்து கொண்டிருக்கிற'

ஏச்சு விழும் கேட்டுக் கொண்டிருப்பேன்.

நான் கவலைப்பட நேர்ந்தால் 'நான் கோபித்து விட்டன் போல. நினைப்பது தான் ஒன்றுமே பேசக்கூடாது என்று. அது எங்க என்னை மறந்து பேசிவிட்டேன்' என்பான்.

பிறகு அவனைப் பார்த்து நான் சொன்னன், "நான் என்ர கவலையைக் காட்டக் கூடாது என்று நினைப்பது தான். அது எங்க முடிந்தது" என்பேன்; சிரிப்பான்.

அவனைக் கண்ட நாளில் இருந்து அவனோடு பழகிய இறுதிக்காலம் வரை என்றும் மாறாத அன்பை வைத்திருந்தேன். எமது நட்பு விடுதலைக்காக உழைப்பதன் ஊடாக உரம் பெற்றுக்கொண்டே போனது.

https://tamileelamarchive.com/



மூசிப்பெய்யும் பனிக்குளிரின் ஊடு, கொட்டும் மழையினூடு, கோடைகால வெயிலில், இலையுதிர்காலத்தில், இலைதுளிர்காலத்தில் எல்லாம் இந்த அகதியுகத்தின் மாந்தர்களான நாங்கள் எங்கள் மண்ணைப் பற்றி பெருமையோடு நினைவு கூர்ந்தோம்.

அப்போது நான் அவனுடடைய கவிதைகள் பற்றி பேசினேன் குறிப்பாக புலம் பெயர் வாழ்வின் அவலம் குறித்துப் பேசுகின்ற கவிதைகள் குறித்து,

"புலம் பெயர் வாழ்வின் அடியின் வலி வெளிப்பட்டு நிற்கிற கவிதைகளில் ஒன்று 'திசையில்லாப் பயணங்கள்', மற்றையது 'உயிர்ப்பின் தன்மையறியா. இந்த இரு கவிதைகளும் அருமையானவை" என்றேன்.

"அப்படியா?"

"ஓம்!"

ஒரு குழந்தை பிய்த்த
புத்தகமாக
என்
மனது கிடக்கிறது.
என்ற அடி எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது.

நானும் மனிதன்
நானும் மனிதன்
உரக்கக் கத்தினாலும்
யாரும் நம்பமாட்டார்கள்

என்கிற விதமாய் விழுந்த கவிதையின் அடியும் எனக்கு நன்கு பிடித்திருக்கிறது என்றேன்.

நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கையில் ஓடிவந்தவர்கள் தானே நாங்கள் அதனைப் பற்றி சொல்லுகின்ற போது, நானும் மனிதன் என்று உரக்கக் கத்தினாலும் யாரும் நம்பமாட்டார்கள் தானே. எப்படி நம்புவார்கள். மனிதனுக்குரிய பண்பு பிரச்சினைகளில் இருந்து தப்பி ஓடுவதாக இருக்க முடியாது. அதுவும் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் துடிக்காத நாங்களும் மனிதர்கள் என்று உரக்கக் கத்தினாலும் யார் தான் நம்பப்போகிறார்கள் என்கிற விதமான கவலையை அப்படிச் சொல்லியிருந்தான்.

அப்படிப் பேசிக் கொண்டிருந்த போது கேட்டான், "நான் அதிக காலமாக காதலைப் பற்றிப் பாடவே இல்லை. காதலைப்பற்றிப் பாடப்போகின்றேன்" என்றான்.

"காதலைப் பற்றிப் பாடுவதற்கு யார் தடை? நீ பாடு!" என்றதும்

"எனக்கு இந்த கட்டிடக் காட்டுக்குள் திரியும் இந்த நிலவு முகம்

https://tamileelamarchive.com/



சிதைந்த நிலவாகத் தெரிகிறது" என்றான்.

"எனக்கும் அப்படித்தான் படுகிறது" என்றேன்

"அது எப்படி உனக்கும் தெரிகிறது" என்று கஜன் குறுக்கிட்டான்.

"நானும் நீயும் பரதேசியள் தானே. பரதேசியளுக்கு நிலவு எங்க இருக்கு?" என்று கேட்டேன்?

அவன் சிறிது நேரம் யோசித்து விட்டு,

"ஏன் இந்த நிலவில் நீயும் நானும் களித்திருக்க முடியவில்லை. அதே நிலவு தானே"

"நிலவு ஒன்று தான், ஆனால் வேரறுந்த வாழ்வு" என்றேன்.

"யார் என்னையும் உன்னையும் இங்கு பிடித்து வைத்திருக்கிறார்கள்?"

"யாருமில்லைத்தான். ஆனால் மனது துடிக்கிறது. வேதனைப்படுகிறது. நிலவில் தீ பிடித்திருக்கிறதாகப்படுகிறது" என்றேன்.

மிகுந்த சிரமப்பட்டு கட்டிடக் காட்டுக்குள்ளால் நிலவைப் பார்த்தான். "இல்லை. இது எங்கட ஊரில் எறிக்கிற நிலவில்லை"

நானும் சொன்னேன், "இந்த நிலவு எங்களுடைய ஊரில் எறிக்கிற நிலவில்லை" என்று.

"எனது கவிதையில் வருகிறவள் ஊரில் இருக்கிறதாக கற்பனை பண்ணுவேன். அவளின் காதலன் பாரிஸில் இருக்கிறதாக கற்பனை பண்ணிப் பாடப்போகிறேன். அப்படிப் பாடுகிற போது இந்த நிலவு முகம் சிதைந்த நிலவாக இருப்பதாக நான் குறிப்பிடப்போகின்றேன்" என்றான்

நான் "முற்றிலும் சரியானதே" என்றேன்.

"என்ன உனக்குமா?"

சிரிப்பு எழுந்தது.

"ஏன் எனக்கு அப்படியிருப்பதாகத் தானே சொன்னேன். பிறகு எப்படி நீ அப்படிக் கேட்கிறாய்?"

"உனக்குத் தான் அன்புள்ள நல்ல மனைவி இருக்கிறாளே" என்றான்.

"உண்மை தான். ஆனால் எங்களுக்கென்றொரு நிலவு முற்றம் இல்லை. நாங்கள் இருவரும் அப்படித்தான் உணர்ந்து வருகிறோம், எங்களுக்கென்றொரு நிலவு இருந்தது. அது சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய குழந்தைகள் ஆடி மகிழ்வதற்கான வாழ்வும் எங்களுடைய மண்ணில் தான் உண்டு என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்" என்றேன்.

கஜன் இதை உணராதவனாகவா கேட்கிறான்? என்னிடம் இருந்து பதில் எடுக்கத்தான் என்பது எனக்குத் தெரியும். எனினும் விவாதித்தோம். புலம் பெயர் வாழ்வின் சகல பிரச்சினைக்குமான தீர்வு பற்றிப் பேசும் போது அவனே சொல்லுவான். "தேசிய வாழ்வோடு இறுகப் பிணைவதே வழி" என்று.

https://tamileelamarchive.com/

## நெருப்புப் பறவைகள்

எம் மண்ணின் காதலர்களைப் பற்றி இந்த இயந்திர வாழ் வியக்கத்துக்குள் யாரும் பெரிதாக கண்டு கொள்ள முடியாது போயிருக் கலாம். ஆனால் இவர்கள் பாரிஸின் நகர்ப்பகுதிகளில் திரிந்த யோகிகள் என்று ஒரு காலத்தில் வரலாற்று ஏடுகள் நிச்சயம் பதியும். ஆராயப் புறப்படும். தாய்நிலத்தை நேசித்துத் திரிந்தவர்கள் கதையின் கதை எழுதப்படும்.

இவர்கள் இந்த நிலங்களில் வீழ்ந்துபட இருக்கும் தம் மக்களின் வாழ்வை அணு அணுவாக ஒரு விஞ்ஞானியைப் போல நின்று பார்த்தவர்கள். இப்படிப் பார்த்து தீர்க்கதரிசனத்தோடு பேசியும், எழுதியும், செயற்பட்டும் வாழ்ந்தவர்கள்.

வீதிக்கு வீதி வெளி நாட்டில் இளம் பெண்கள் காதலின் மாயவசீகரத்தில் தோய்ந்து போய் திரிவார்கள். காதலின் திளைப்பில் மாங்கிளிகளைப் போல மயலுற்று இருப்பார்கள். செந்நிறமான பெண்கள் தங்கள் அழகு வெளிப்படும் வண்ணமாய் வீதியில் திரிவார்கள். எங்கும் கண்ணிவயல்கள். இவற்றைக் கடந்து தான் இந்த விடுதலைச் சிட்டுக்கள் என்னமாய் சிறக்கை அசைத்து திரிந்தன.

கூடு திரும்பும் குதூகலத்தோடு<br>வான் வெளிப்பரப்பில்<br>தீப்பறவைகள் சிறகசைத்தன

எமது தாய் மண்ணை நோக்கிய தேடலும், காதலுமாக திரிந்து நெருப்பில் குளித்தவர்கள்.

எமது தேசியத் தலைவரின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு தெருக்களில் நடந்தார்கள்.

சூரியனை நோக்கிய<br>பறப்பின் போது<br>இரு பறவைகள் வீழ்ந்தன.

இரு பறவைகளும் விடுதலை எனும் இலக்கை நோக்கிச் செயற் பட்டவை. ஒளிக்கனியை எமக்காக பறித்துவரச் சென்றவர்களைக் காணவில்லை.

தேடினோம்.

எமது தோழர்கள் இரவு பூராகவும் தேடினார்கள்.

தோழர்கள் தேடத் தொடங்கியிருக்கிறார்கள்.

— சுபாஸ்

★★★

https://tamileelamarchive.com/



**லெப். கேணல் நாதன், ஈழமுரசு ஆசிரியர் கஜன் ஆகியோருக்கு பாரிஸில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் லண்டன் கிளை சார்பில் திரு. தனம் அவர்களால் வாசிக்கப்பட்ட நினைவுக் கவிதையிலிருந்து.....**

இதுகாலவரை காண்போருக்கு சொல்லாற் கட்டிடும் கல்வெட்டு அல்ல
விடுதலை மொட்டுக்கள் வீரிட்டு வடிக்கும் கண்ணீர்ச் சொட்டு
நெற்றியில் இருக்கின்ற மாவீரப் பொட்டு!

எம்முடன் நடந்த இனிய தோழரே!
எம்மையும் நடத்திய எங்கள் நண்பரே!
நம்மைப் பிடித்த பிசாசுகள் நாசத்தால்
பொன்னுடல் விட்டுப் புகழுடன் எய்தினீரே!

புல்லரின் ரவைகள் புகுந்த துளைத்ததால்
நல்லவர் உங்களை நாங்கள் பிரிந்தோம்
வல்ல எம் தலைவனும் மக்களும் வருந்தினர்
சொல்லெணாத் துயரில் சுதந்திரம் துவண்டது!

கல்லிலும் முள்ளிலும் கடுங்குளிரிலும் மழையிலும்
எல்லையில்லாது வருந்திடும் நோயிலும்
பல்விலங்கூரும் படர் இருள் வனத்திடை
தொல்லைகள் தாங்கித் துயர்படும் மக்களை
உள்ளத்திருத்திய உத்தமர் நீங்கள்!
உலக நீதிக்காய் உழைத்தவர் நீங்கள்!
அல்லும் பகலும் அகிலத்தின் தெருக்களில்
அலைந்து திரிந்து ஆதர வீர்த்தவர்!
வெல்லும் நம்மினம்; விடுதலைப் பாதையில்
செல்லும் என்ற தரிசனம் கொண்டவர்!

இனிய நாதண்ணனே! எங்கள் இனத்திற்காய்
புனிதப் பயணத்தைப் புரிந்த சகோதரா!
கனவும் நனவுமோர் மக்களாய்க் கண்ட உன்

https://tamileelamarchive.com/

## நெருப்புப் பறவைகள்

நிலவு முகத்திலே நிகழ்த்திய கொடுமையை
கனவிதா இல்லை நனவிதா என்றே
கலங்கித் துடிக்கிறோம்; கவலையில் நடக்கிறோம்!
லண்டன் கிளைக்கு நீர் வருவதும் எம் கிளைத்
தொண்டர்களோடு தோள் தந்து நிற்பதும்
இன்று போலன்றோ எம்முடன் வாழுது....
எப்படி ஐயா கண்களை மூடினீர்?

சென்ற காலத்தில் ஒரு சில வாரங்கள்
நின்றீர் எம்முடன்; நிதிதனைக் கடந்த ஓர்
நண்பனாய் உறவாய் நம்முடன் கலந்தீர்
தொண்டு என்பதன் தூரிகையாகினீர்!
அன்பால் அணைத்தெம்மை அணியாகக் கண்டீர்!

பகிர்ந்து உண்பதைப் பண்பாடாய்க் கொண்டு நீர்
மகிழ்ந்து நம்மோடு மடப்பள்ளி மூட்டினீர்!
நெகிழ்ந்து போனோம் நாம்; நித்திரை நேரத்தை
துயின்றும் துயிலாமத் துரத்தி இயங்கினீர்!

பூவாலே புனைந்த புதுநெஞ்சம் கொண்ட
மாவீரர் தினத்தை மகத்தான உணர்வுடன்
தெய்வீக உணர்வுடன் செயற்பாட்டில் இறங்கினோம்

மாவீரர் வரிசையில் நீர் வாழ்வீர் என்ற
தார்மீகம் எங்கள் தலையில் ஏன் வீழ்ந்தது?
கார்மேகம் எதற்குக் கடல்நீரிற் தோய்ந்தது?
சோர்வின்றி உங்கள் சோழி முகங்களைச்
சேர்த்திங்கு நின்றோம், செந்தீயை நுகர்ந்தோம்

எத்தனை நாடுகள் ஏறியிறங்கினாய்
எங்கள் நாதண்ணனே எப்படி ஆறுவோம்
அத்தனை நாட்டையும்அணைத்திட எழுகிறோம்
அங்கெனம் உனது பணிகளைத் தொடருவோம்
படுக்கையில் விழ்ந்து சிரிக்கும் பகைவனின்
துடுக்கை நறுக்கிடப் படையெனத் திரள்கிறோம்!

https://tamileelamarchive.com/



ஆசைத் தம்பியே ஆருக்குச் சொல்லியழ...
பாசத்தின் குழைவும் பார்வையிற் துணிவும்
யாருக்கும் பணியா உறுதியும் விடுதலைத்
தேருக்கு முன்நின்று நீள்வடம் பிடிக்கும்
ஆர்வமும் கொண்ட உன்னை நாம் இழந்தோம்!
ஆருக்குத் தம்பி இதைச் சொல்லியழுவோம்!

ஈழமுரசின் வாரக் குரலே!
நாளைய உலகின் நல்லதோர் கனியே!
நேரம் மறந்து பாரம் தூக்கிய
தேசத்தின் தொண்டனே! தொடர் எழுத்தாளனே!
இரவுக்குள் அமர்ந்து கலைக்குள் எழுந்து
தரவுகள் தொகுத்து தாள்களை வகுத்து
கட்டுரை யாத்து கவிதைகள் பார்த்து
வெட்டி நிமிர்த்தி வெளியீடு செய்த
அற்புதப் பிறவியே! இதழாசானே
நினைத்ததை வெளியில் நறுக்கெனக் கூறும்
வெளுத்த இதயமே! விரளாத கன்றே!
புலம் பெயர் வாழ்வின் பூச்சினாற் தமிழன்
அலைந்திடுவானோ என்றே அஞ்சிக்
கலம்பகம் எழுதிய காலத்தின் கருவே!

கண்களை மூடிய காரணம் என்னெ
பண்களோடு நாம் கூடிப் பிறந்தவர்
என்றதோர் உண்மையை மீண்டும் உணர்ந்தோம்!
எட்டப்பன் எம்முடன் வாழ்கிறான் புரிந்தோம்!

துன்பம் நெஞ்சைத் துண்டாட வார்த்தைகள்
அன்பைக் காட்டத் தெரியாமல் ஒளித்தன!
சென்று வாடாப்பா...... இல்லை இல்லை
சுதந்திரத் தீயினை ஏந்தி வாடாப்பா!

நாதனே! கஜனே! நாட்டின் ஒளிகளே!
வேதனைத் தீயிலே விடைபெறும் நண்பரே!
தேசத்தின் மூச்சினைத் தேசி நடந்தீர்

https://tamileelamarchive.com/

## நெருப்புப் பறவைகள்

தேகத்தை விட்டுத் தேவராய்ப் பொலிந்தீர்.
ஆறுதல் தர நமக்கேதுமிங்கில்லை
ஆதி முகங்களுக்குரிமையும் இல்லை!
நாடெமக் குன்றெனும் நல்லதோர் செய்தியே
நம்மையும் மனிதராய் நாட்டிடும் எல்லை!

தாயகத் வானிற் தவழுவான் சூரியன்!
பாய்விரித்தொரு நாள் படகிலே வருவான்!
விடுதலைக் காற்று வீசிடும் போதிலே
அடிமை விலங்கு அறுந்து நம் மண்ணிலே
ஆட்சியும் கொடியும் உயர்ந்திடும் போதிலே
விடிவின் விளக்குகள் உங்களை நம்மினம்
விழியில் நீருடன் வணங்கிடும் அறிவீர்!

தறிக்கத் தறிக்கத் துளிர்த்தெழுவோம்! இது உறுதி!
விழுத்த விழுத்த விரைந்தெழுவோம்! இது உறுதி!
அழுந்த அழுந்த ஆர்த்தெழுவோம்! இது உறுதி!
எரிக்க எரிக்க உயிர் பெறுவோம்! இது உறுதி!

★★★

https://tamileelamarchive.com/



# எழுதப்படாத நியாயங்கள்

நியாயங்கள் சரங்கோர்த்து நிற்கின்றன. ஐரோப்பிய வீதியொன்றில் நடந்துவிட்ட அந்த நிகழ்வு புலம் பெயர் மக்களின் வாழ்வையும் ஒரு கணம் தூக்கி நிறுத்தி ஒரு பாட்டத்திலும் தூக்கிப் போட்டது. இதுவரை மாவீரர் நினைவுகளுக்காக தமிழீழத்துப் போராளிகளுக்கே விளக்குகளை ஏற்றிவந்த புலம் பெயர்ந்தோர் அந்தத் துயர நிகழ்வின் பின் தம்மிடையே வாழ்ந்து; தம் அருகிலேயே வீழ்ந்துவிட்ட மாவீரர்களுக்காக விளக்குகளை ஏற்றிக் கொண்டனர். “காரீயம் துளைத்த அந்த இதயங்கள்; இளைஞரது வித்துடல்கள்; சில்லிட்டு அசைவற்றுக் கிடப்பதாகத் தோன்றினாலும்; ஒடுக்க முடியாத வீரியத்துடன் அவை எங்கோ வாழ்கின்றன!” என்ற வால்ட்விக்மனின் கவிதை வரிகளாலேயே இப்போது அனைவரும் தங்கள் துயரங்களை நீவிவிட்டுக் கொள்வதாகத் தெரிகிறது.

சிரித்த முகம்; எல்லோருடனும் தேடிச் சென்று பழகும் கலகலத்த சுபாவமும் கொண்ட நாதன் ஐரோப்பிய மண்ணில் விதையாகி லெப். கேணல் நாதனாக இறுதி வரிகளை எழுதிக் கொண்டார். அதுபோல யதார்த்தத்தை உடைத்துப் பார்க்க முற்பட்ட உலகப் பிரசித்தமான பத்திரிகையாளர்களில் பலர் எதிர் கொள்ள நேர்ந்துவிட்ட முடிவையே தானும் சந்தித்து, 31 வது வயதில் பாரிஸ் நகரவீதியின் மேல் விழுந்து; புலம் பெயர் இலக்கியத்திற்கு புதிய பரிமாணம் தேடி வைத்தார் கஜன். “புலம் பெயர் மக்களின் வாழ்வு சரியான முறையில் பதிவுசெய்யப்பட வேண்டும்!” என்பதுதான் அவர் எப்போதும் பேசிவந்த ஆத்ம வரிகள். ஆனால் புலம் பெயர் வாழ்விற்கும்; தாயகத்து வாழ்விற்கும் இனியென்ன வேறுபாடு அவரது வாழ்வையே பதிவாக்கி விட்டிருக்கிறது புலம் பெயர் இலக்கியம்.

படைப்புக்களாலும்; படைப்பாளராலும் நிறைந்து போயுள்ள புலம் பெயர் இலக்கிய உலகில் கஜன் வித்தியாசமானவர். ஊசலாட்டமற்ற மனம் கொண்ட உறுதியான படைப்பாளி “உண்மை நிலையைக் கண்டு, உள்ளுக்குள் ஒடுங்கிப் போகாது சீறியெழத் தவறுபவர்களும்; சினந்து பேசாதவரும் அடிமைகளே!” என்பார் ஜேம்ஸ் ரஸ்ஸல். இதற்கேற்றால் போல கஜனின் சுதந்திரமான பக்கங்களிலிருந்து புறப்பட்ட பாத்திரங் களே ஆசைத்தம்பியும், அபினயனும். “எந்தச் சிந்தனைகளானாலும் அதை நமக்கு சௌகரியமாயிருக்கு!” என்ற சமூக வேட்கையைப் புரிந்து கொண்டு, எளிய தமிழால் சமூகத்தின் மீது புதிய போர்வாள் கொண்டு வீசினார்.

வாராவாரம் அவர் சமூகத்தைக் கொத்திப் பறித்த வேகம் எண்ணற்ற கேள்விகளை அவர்முன் வைக்க வேண்டிய தேவையைப் பலர் முன்

https://tamileelamarchive.com/



ஏற்படுத்தியிருந்தது. இதனால் பல கோணங்களில் அவர் முன் கேள்விகளை முன்வைத்தனர்.

அவற்றில் பல நட்பு ரீதியானவையே! "தமிழில் மட்டும் ஏன் இத்தனை பெருந் தொகையாய்ப் பக்தி இலக்கியங்களே நிறைந்து கிடக்கின்றன?" "யாமார்க்கும் குடியல்லோம்! நமனையஞ்சோம்!" என்ற அப்பர் தேவாரம் முதல் மரண பயம் ஓர் சங்கேதக் குறியாக ஆட்சி செலுத்தும் அருணகிரியார் பாடல்கள்வரை துறவிகள்கூட வாழ்க்கையை உள்ளபடி பேசுவதற்கு முடியாத நிலையிலேயே தமிழிலக்கிய வரலாறு தடுமாறியிருக்கிறது என்றால்; இன்று தாங்கள் காட்டும் அசுர வேகம் மெதுவாக ஓடும் சமூகத்திலேயே எவ்வளவுதூரம் சாத்தியப்படும்? என வினவினர். அப்போது, "இலட்சியம் முக்கியம்! அதில் பின்வாங்குவதைவிட ஈழமுரசை இழுத்து மூடுவது மேல்! என்று உறுதியாகக் கூறியிருக்க முடியாது. "மக்கள் திரள் என்பது தன் திறமை பற்றி அறியாதது.எனவேதான் இத்தனை சுமைகளையும், கசையடிகளையும் தாங்கி நிற்கிறது. அதேவேளை நொடிப்பொழுதில் உதறித்தள்ளக்கூடிய குழந்தையால் அது விரட்டப்படுகிறது!" என்று தாமடோ கூறியது போல கஜனின் இளைய எழுத்துக்கள் பாரம் சுமந்து நிற்கும் சமூகத்தை வேகமாக விரட்டியது. இதனால் அவர் கடும் எதிர்ப்புக்களைச் சம்பாதித்துக் கொண்டார். ஆனால், கடும் எதிர்ப்பென்பது கடும் விருப்பின் மறுபக்கமே! என்பதை அவரின் பிரிவுக்குப்பின் எல்லோரும் காணுகிறார்கள்....

அந்த,
மேடை வானங்களின்
வார்த்தை மழைகளில்
எங்கள் மனவயல்கள்
நனைந்த தென்னவோ உண்மைதான்
பின்னர் தெரிந்தது
அது – வெறும்
கானல் மழையென்று
இதனால் தான் – இன்று
சின்னச் சின்ன
நிலவுகள் கூட
ஆயுதம் ஏந்துகின்றன...

இது கஜன் எழுதிய ஆரம்பகாலக் கதைகளில் ஒன்று. இக்கவிதையை அவர் முன்பு தேர்தல் அரசியல்வாதிகளுக்கு எதிராக எழுதியிருந்தார். ஆனால் இக்கவிதையில் தரும் பொருள்தான் அவருள் எழுத்து வடிவமாகக் கனன்று, பின்னாளில் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக ஆயுதமேந்தியிருக்கிறது.

இலக்கியங்கள் பெயரளவில் புலம்பெயர் படைப்புகள் என்று பெயர் பெற்றாலும்; வாழ்வும், சம்பவங்களும் மாற்றமடையாது, மேம்பாட்டை

https://tamileelamarchive.com/



நோக்கி நகர மறுக்கும் வெளிநாட்டு வழியில் நின்று, "புலம்பெயர் படைப்பாளிகள் தமது வாழ்வியல் அவலத்தைப் பதிவதை விடுத்து, தாயகத்தைக் கற்பனையில் பார்த்துப் பதிதல் தவறு!" என்று உறுதியாகத் தெரிவித்ததும்; அதற்காகப் பணியாற்றியதும் அவரது சேவையில் முக்கிய பங்காகும். தமிழீழத்தில் உதிர்ந்துபோன ஈழமுரசு எப்படி மறுபடியும் ஐரோப்பாவில் பூத்துக்கொண்டதோ? அதுபோலவே ஐரோப்பிய மரங்கள் இலைகளை உதிர்த்து நின்ற காலத்தில் போன ஆசைத்தம்பிகள் அதே மரங்கள் மறுபடியும் மறுபடியும் பூத்துக் குலுங்கும் காலம் வருவதைப் போல; மீண்டும் பூத்துக்கொள்வார்கள் என்பதும் ஆச்சரியத்தோடு கலந்த உண்மைதான்.

அவர்கள் யூதர்களைப் பிடிக்க
வந்தார்கள்
நான் எதிர்ப்புக்குரல்
எழுப்பவில்லை
ஏனெனில் நான் யூதனல்ல
பிறகு கம்யூனிஸ்டுகளைப் பிடிக்க
வந்தார்கள்
நான் எதிர்ப்புக்குரல்
எழுப்பவில்லை
ஏனெனில் நான் கம்யீனிஸ்ட் அல்ல.
பிறகு கத்தோலிக்கர்களைப்
பிடிக்க வந்தார்கள்
நான் எதிர்ப்புக் குரல்
எழுப்பவில்லை
ஏனெனில் நான் கத்தோலிக்கனல்ல.
பிறகு என்னைப் பிடிக்க வந்தார்கள்
அப்போது எனக்காக குரல்
எழுப்ப
எவரும்
விட்டுவைக்கப் படவில்லை!

இது நியோ முல்லர் என்பவர் எழுதிய கவிதை. அந்த இரு இழப்புக்களின் பின்னாவது புலம்பெயர் சமூகம் இந்தக் கவிதை வரிகளைச் சீர்தூக்கினால் தன்முன் எழுந்துநிற்கும் புதிய பணிகளை இலகுவாக உணர்ந்து கொள்ளமுடியும், உண்மையில் அதுவே இவ்விரு மாவீரர்களுக்குமான அஞ்சலியுமாகும்.

—கி. செ. துரை

https://tamileelamarchive.com/



# சிறகுகள் அசைகின்றன....

- ஞானவேல்

விழித்திரையை
நீர் மறைக்க
விரியும் அந்த
இனிய காட்சிகள்.....

நீங்கள்
புயலைப் போல்
வருவீர்கள்.....

காற்றைப் போல்
கைக்குள் அடக்க முடியாதது
உங்கள் சிந்தனைகள்.

உங்களுடன்
எப்போதும் ஒட்டியிருக்கும் வேகம்
எங்களுக்குள் எதையோ
அடிக்கடி ஞாபகமூட்டும்.

எதை?

விரைவான
விடியலின் தேவையை!
நீங்கள்
மண்ணுக்கு உவந்த
தொண்டானது
பசியில் தவிக்கும் குஞ்சுக்கு
இரைதேடும்
தாய் பறவையின் செயலை போல
துடிப்பானது; உயிர்ப்பானது!

போர்க்குருவிகளின் சரணாலயத்திற்கு
வேடன்
வில்லும் அம்புமாய்
நுழைந்தது
துரதிஷ்டமானது....

https://tamileelamarchive.com/



பூக்கள் உதிரும்
மாலை வேளை
தமிழர்கள் இதயம்
அதிர்ந்து போனது

லாச்சப்பல் வீதியிலும்
பூகம்பம் அதிருமா?
அதிர்ந்ததே!
எரிமலை சிதறுமா?
சிதறியதே!!

எல்லாமே
நிகழ்ந்து போனது;
ஈரமில்லா நெஞ்சுடையோரின்
ஈனச்செயலால்
தீப்பிடித்த நந்தவனத்தில்
கருகிக் கிடந்தது
இரண்டு
தியாகப் பறவைகள்....
இன்னும்
சூடு கூட ஆறாத
அந்த சாம்பல் குவியலில்
என்ன அசைகிறது....?!

அது
சிறகுகள்!!
அட என்ன ஆச்சர்யம்!
ஒன்றல்ல
இரண்டல்ல
ஒரு நூறுக்கு மேல்;
அசையும் சிறகுகள்.

நாதன் அண்ணா!
கஜன் அண்ணா!
அமைதியாக உறங்குங்குள்!
உங்கள்
உயிர்ப்பான,
உன்னதமான உணர்வுகள்
அசையும் சிறகுகளில்
சுமக்கப்படும்.

https://tamileelamarchive.com/



# வித்துக்களான முத்துக்கள்

நாதனையும் அவன் தோழனையும்
நாமிழந்து விட்டோமாம்
நம்ப மறுக்கிறது எங்கள் மனம்!

வேருக்கு நீராய் விடுதலைக்கு உயிராய்
பாரில் நின்றுழைத்த வீரர்கள் இவர்கள்!
நேசத்தைப் பார்க்காது நின்றுழைத்த
தேவர்கள் இவர்கள்!

சோகத்தைக் கண்டு துயருறும் வேளையெலாம்
தோள் தட்டித் தீர்த்த வீரர்கள் இவர்கள்
யார் மார்பில் போயினி ஆறுவோம்

நாதன். . பேரின்பநாதன்
நாட்டுக்கும் நமக்குமிடை நின்ற
நல்தூதன்!

நீண்ட உருவம் நிமிர்ந்த தோற்றம்
தாண்டி நடக்கும் தனிச் சிறப்பு
வீண் பேச்சு விதண்டாவாதமின்றி
காண்போரையெல்லாம் கவரும்
கனிப்பேச்சு
ஏனின்று மூச்சடங்கி யுள்ளது
முடிவிழந்து கிடக்கிறது.

லெப்டினன்ட் கேணல் நாதன் – இவன்
கைக்கடிகாரம் போல் கணநேரம் ஓயானே
வெற்றுயிராய் ஏனிங்கு.
வீழ்ந்து கிடக்கிறான்

விடுதலையின் விலை உணர்ந்தமகன்
வெளிநாடுகளின் திசையறிந்தமகன்
நினைவிழந் தேன் நீண்டு கிடக்கிறான்
தேசிய கீதத்தை தேசம் பரவச் செய்த

https://tamileelamarchive.com/



நாதனின் செயல் சிலதை
நாவால் கூற நம்மால் முடியாது!

கஜேந்திரன்
ஈழமக்களின் இதயநாதமாய் விளங்கும்
ஈழமுரசிற்கு கிடைத்த புதையல் இவன்

சீராய் எழுதுவான்
சிறப்பாய் வடிவமைப்பான்
எடுப்பாய் இருப்பதற்காய்
இன்னும் பல சேர்ப்பான்
கூறவழியற்ற கூசும் செய்திகளை
வாசமுடன் சேர்த்து வடிவாய்த் தரும்
ஆசைத்தம்பி இவன்

பேசியறியான்
பிறர் பேச்சுக் கேளான்
நீதி எதுவோ அதையே
நின்றுரைப்பான்

பாதியிலே நிற்குதையா உன் பணி
பாசமுடன் வந்து நீ முடி

கலங்கரை விளக்குளாய்
கண்சிமிட்டி நின்றவர்கள்
இலங்கையில் இனவாதத்தால்
இரையாகிப் போய்விட்டனர்
கலங்குகிறது எங்கள் மனம்

காலத்தின் தேவையறிந்து
கடல் கடந்து சேவை செய்த
முத்துக்கள் இரண்டை – இம்மண்
மூடி விட்டது
வித்துக்களே உங்கள் விழுதுகள்
பணி தொடரும்

*–தமிழொளி (இலண்டன்)*

https://tamileelamarchive.com/



# மௌனம் கலைத்து வெடித்த துப்பாக்கி!

மௌனம் கலைத்து வெடித்தது துப்பாக்கி
வெடித்த துப்பாக்கியின் கந்தகப் புகை எழுதிச் சென்ற
செய்தி அடிமையாய் வாழுங்கள்; அற்பத்தனமாய் வாழுங்கள்;

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் திட்டமிட்ட அராஜகச்
செயலுக்குப் பலியாகிப் போனவர்கள் எங்கள் நாதனும் கஜனும்
நீண்ட சிறீலங்கா அரசின் படுகொலைக் கரங்களால்
பிரான்ஸ் தேசத்தின் லாசப்பல் தெரு இரத்தத்தால்
சிவந்து போனது. இரத்தச் சிவப்பில் வீழ்ந்து கிடந்தவர்கள்
மனித நேசத்தின் மகத்தான முத்திரைகள் இரண்டு

எமது தேசத்தின் முழுமையான விடுதலைக்காக
முட்களிடையே மலர்ந்த ரோஜாக்கள் இவர்கள்
வசதிகளையும் வாய்ப்புக்களையும் தேடி ஓடாது, வாழ்க்கையை
அர்த்தமாக்கிய உன்னத வீரர்கள் இவர்கள்.

எம் நேசத்திற்குரியவர்களே,
நினைத்துப் பார்க்கிறோம்; ஒவ்வொரு கணமும்
மக்களின் விடிவை மனதில் நிறுத்தி நீங்கள் பதித்த
சுவடுகள் எங்கள் கண்முன்னே நிற்க எங்களின்
இதயம் கனக்கிறது. கனத்த இதயத்துடன் உங்கள்
நினைவுகளை நெஞ்சினில் நிறுத்தி, ஆழச் செல்வோம்.
உங்களின் முன்மாதிரிகளை பதாகைகளாகச் சுமந்து
தொடர்ந்தும் செல்வோம் இதுவே, நாங்கள் உங்களுக்குச்
செலுத்தும் வீரவணக்கங்களாகும்.

எமது அன்பார்ந்த மக்களே,
நேற்றைய தினத்தினை திரும்பிப் பாருங்கள்
எதிரி எம் தோளில் ஏறி நின்று எக்களமிடுகிறான்

https://tamileelamarchive.com/



எங்கள் முன்னோர்களின் எலும்புகளைக் காட்டி "அடிமைகளின்
எலும்புகள்" எனக் கூக்குரலிடுகிறான்.
நமது குழந்தைகளின் எதிர்காலத்தின் மேல் ஏவுகணைகளை
நிறுத்தி வைத்திருக்கிறான்.

இவைகளை எதிர்த்து "நாங்களும் இந்தப் பூகோளத்தின்
சுதந்திரப் பிரஜைகள்" என ஓயாது குரல் கொடுத்த
நாதனும் கஜனும் மரணித்த செய்தி உங்கள்
நெஞ்சங்களை உலுப்பியிருக்குமே
உரிமை வேண்டி உயிரை ஈர்ந்தவர்
சொல்லிச் சென்ற செய்திதான் என்ன?

ஒன்றை மட்டும் நினைவிற் கொள்வோம்
அடிமையாய் வாழ்வதைவிட அற்பத்தனமானது
வேறெதுவுமில்லை. அடிமை வாழ்வைக் களையும் வரையும்
அனைத்தும் எமக்கு இரவல்தான்.
உலகத் தமிழர் எல்லாம்
விடுதலைக்காய் ஒன்றுபட்டார் என்ற செய்தி
கல்லறையில் தூங்கும் எம்மவர்க்குக் கேட்கட்டும்.

– தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
(நோர்வே)

★★★

https://tamileelamarchive.com/

## நெருப்புப் பறவைகள்

வாழைத் தோட்டங்களின்
உதவியற்ற கோரச் சூழலில்
துடிக்கின்ற வாழ்க்கைப் புல்வெளிகளில்,
கரும்புத் தோட்டத்தில்,
காப்பிச் செடிகளில்,
உப்பளத்தில்
அவர்கள் வெடி குண்டுகளை வீசும் போது
வாழ்ந்து கொண்டுதானிருக்கிறாய்!

கியூபாவிற்கு வனப்பாடம்

கர்விங்கு தாடியுள்ள முகம்
ஆணையிடாமல் அன்புடன் கூறும்
திறமான குரல்;
பின்பற்றுவோரை வழிநடத்துதல்;
தோழர்களை நினைவிற் கொண்ட நெஞ்சம்;
மென்மை எனினும் கவிமை...

எங்கள் அன்புத் தலைவனே
இனிய தோழனே....நீ

உன்னைக் காண்கிறோம்
ஒவ்வொரு நாளும் போராளியாக;
எளியவன் எனினும் வலியவனாக;
உன்னைக் காண்கிறோம்
ஒவ்வொரு நாளும்

அன்புத் தலைவனே!
இனிய தோழனே!
நீ மாந்தரில் தூயவன்!
குழந்தை போல களங்கமற்றவன்!

நிறம் மங்கிய, கீறல் விழுந்த,
பயன்படுத்திப் பழையதாகிய

https://tamileelamarchive.com/



நின் போர்மெலிவுகளுடன் கடந்து போகிறாய்!

முன்பு மலையுச்சிகளுக்கு உரியவனாய் இருந்தாய்
இன்று காட்டகப்பட்டவன் ஆகியுள்ளான்
வாளாலும் சொல்லாலும்!
அரையாடைதான் உனக்குக் கிடைத்தது எனினும்
வலிமை மிக்க மார்பு உனக்குரியது;

சுழன்றழைக்கும் காற்று
மெல்ல மலர்கின்ற பன்னீர்மலர்...
இங்கே அமைதில்லை!

குவேரா! உனக்கு நலம் வாய்க்கட்டும்!

அன்றியும்
அதைவிட நல்லது இதுதான்
அமெரிக்காவின் ஆழத்திலிருந்து
எங்களுக்காகக் காத்திருப்பது!

உன்னோடு சேர்ந்து நாங்களும் வருகிறோம்..!
நாங்கள் துடிக்கிறோம்.
நீ செத்தது போல வாழ்வதற்காகச் சாக
நீ வாழ்வது போல வாழ

எங்கள் அன்புத் தளைவனே!
இனிய தோழனே!

தமிழில்: இரணியன்

★★★

https://tamileelamarchive.com/



# கஜன்: ஒரு பேனா தூக்கிய போராளி



ஒரு பேனாவுக்குத்தான் எவ்வளவு சக்தி. குறுகிய காலத்திற்குள்ளேயே தமிழ் மக்களை தன் எழுத்தாற்றலினால் கவர்ந்தவர் 'ஈழமுரசு' ஆசிரியர் கஜன் அவர்கள்

விடுதலைக்கு வேண்டியது இன்று வெறும் பார்வையாளர்கள் அல்ல, பங்காளர்களே என்பதை அவரது பேனா மென்மையாக மக்கள் மனதில் பதியவைத்தது.

வளர்ச்சிகாணாத எந்தக் கலையும் தனித்துவம் பேணாத எந்த ஆக்கங்களும் நாளடைவில் செத்துப் போகும் என்பதை உணர்ந்த மாவீரர் கஜன் அவர்கள் சாகாத படைப்புக்களை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என உழைத்தவர்.

'ஈழமுரசு' பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவந்தவேளை அவருடன் தொலைபேசியில் பேசும் வாய்ப்புக் கிட்டியது.

ஈழமுரசு பலதரப்பட்ட விடயங்களையும் ஆழமாகவும் விபரமாகவும் தாங்கி வருகிறது. முதலாவது இதழைப் பார்க்கும் போது இதனையே பல இதழ்களாக மக்களுக்கு பிரித்துக் கொடுக்க கூடிய அளவுக்கு பல விடையங்கள் பொதிந்து இருக்கிறது என்றேன்.

அதற்கு அவர் இப்படிக் கூறினார்,

நாம் தமிழ் மக்களுக்கு நிறைய விடையங்களை நிறைவாகவும், விரைவாகவும் கொடுக்க வேண்டிய காலத்தில் இருக்கின்றோம்' என்றார்.

அதன் பொருள் இப்போது விளங்கிறது. தன்னால் முடிந்ததை விரைவாக நிறைவாகப் கொடுத்து விட்டு பேனா தூக்கிய போராளியாக, மாவீரனாக மக்கள் மனதில் நிறைந்து விட்டார் கஜன் அவர்கள்.

— ஓவியர் கண்ணா

https://tamileelamarchive.com/

https://tamileelamarchive.com/

முழங்கிய முரசும்
இயங்கிய தனுசும்
வழங்கிய பணிகள்
வரம்பில் அடங்கா

களங்களை நாங்களும்
காணவைத்தவர்
உளங்களில் இருந்து
எப்படி மறைவர்?